PUBLIC LIBRARY,
JAFFNA.

# வெளிச்சம்

ஆனி — 1993

20/=



விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
உங்களுக்குத் தேவையான டிசைன்களில்
நகைகளை ஓடர்கொடுத்துப்
பெற்றுக் கொள்ளலாம்.

தரம் குன்றாத தங்க நகைகளுக்கு
என்றும் நாடவேண்டிய ஸ்தாபனம்.

## ஸ்ரீகாந்தா நகைப்பூங்கா

87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



நூலகம்
மாநகராட்சி மன்று
11-6-1993
யாழ்ப்பாணம்

ஒரேயொரு வெடி தான்,
அட்டதிக்கும் அதிர்ந்து குலுங்கும்.
சரித்திரத்தைத் தலைகீழாக்கி விட்டு,
சந்தனமேனி காற்றில் கரையும்.
உலகம் ஒரு தரம் புருவம் உயர்த்தும்.
வார்த்தை வலைக்குள்ளே சிக்காத தற்கொடை,
எவருக்கும் தெரியாமல் உறங்கும்.
வழியனுப்பி வைத்த விழிகள் கலங்கும்.
என்றாலும்,
கண்ணீர்க்கோடு கன்னத்தில் இருக்காது.
சாவுக்குத் தேதி குறித்து;
நேரம் கணித்து;
இலக்கு நோக்கி நகர எவரால் முடியும்?
வாழ்வு வருடங்களால் மட்டும்,
கணிக்கப்படுவதில்லை.
சங்கை பெறுகின்ற சாவும்,
வாழ்வாகிப் போகும்.
ஜூலை ஐந்தாம் தேதி
வருடத்தில் வரும் ஒரு நாளல்ல...
நெல்லியடியில்... மில்லர் தொடக்கிய
புது வரலாற்றின் பிறந்தநாள்,
தமிழருக்குள் நம்பிக்கை மொட்டவிழ்ந்து
விடுதலை வாசம் வீசத் தொடங்கிய நாள்,
ஊழிக்கூத்தின் அரங்கேற்ற நாள்,
ஆம்......
அது, கரும்புலிகள் நாள்.

— மாலிகா —

கரும்புலிகளின்
நினைவில் நனைவோம்

## "ஜூலை – 5" கரும்புலிகள் நாள்

வெளிச்சம்
ஆனி-1993 இதழ்-15

எல்லாமே நேற்றுப் போல் நிழலாடுகின்றது. என்றாலும், அடுத்த மாதத்துடன் வெளிச்சத்துக்கு இரண்டு வயது முடிகின்றது. 'வெளிச்சம்' ஆரம்பிக்கப்பட்ட போது - "எமது தமிழீழ விடுதலைக்கான போராட்டம் உச்சக்கட்டத்தில் இருக்கும் போது பிறப்பெடுக்கும் 'வெளிச்சம்' விடுதலை பெற்ற சுதந்திர தமிழீழத்திலும் தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென்ற பெரியகனவு எங்கள் நெஞ்சுக் கொடியில் பூத்திருக்கின்றது" என்ற கருத்தைக் கூறியிருந்தோம். இது வெறும் கனவல்ல; நாளை நடக்கப்போகும் நிஜம்.

விடுதலையின் பெறுமானத்தைப் புரிந்துகொண்டும், போராட்டத்தின் அவசியத்தைத் தெரிந்துகொண்டும், பலபடைப்பாளிகள் வெளிச்சத்தைப் பார்க்கத் தங்கள் விழிகளைத் திறந்துள்ளனர். கலை இலக்கியங்களை எங்கள் மண்ணின் போராட்டத்தை நோக்கி நகர வைத்தபணியில் வெளிச்சத்துக்கு கணிசமான பங்குண்டு. ஆனால், இம்மண்ணின் மேடைப்பேச்சுத்துறை அல்லது பேச்சுக்கலை —கலை இலக்கியங்களின் போக்குக்குமாறாக, உலக ஒத்திசைவுக்கு எதிராக எமது போராட்டத்தின் செல்வழியில் செல்லாது தடம்மாறிப் போவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. இது வெளிச்சத்துக்கு வியப்பையும், கவலையையும் தருகிறது.

கலைஞர்களுக்கும், இலக்கியப் படைப்பாளிகளுக்கும் இருக்கும் சமூகப்பொறுப்பை அவர்கள் தங்களால் முடிந்தளவு நிறைவேற்றுவது போல, புதிதாக இங்கு தோற்றம் கட்டி வளர்ந்து வருகின்ற பேச்சுத்துறையாளர்களும், தமிழீழத்தின் உண்மைக்கு உரித்துடையாளர்களாக வேண்டுமென்று வெளிச்சம் விரும்புகின்றது. ஆனால், இந்தப் பேச்சுக்கலை மாயக்கண்ணாடி மர்மம்போல, வெறும் கிளுகிளுப்பைக் கொடுக்கும் சில்விடும் தன்மை போல திசைமாறிக் கொண்டிருக்கிறது.

கோவில் திருவிழாக்களிலும், சமூகத்தின் பொது விழாக்களிலும் பேச்சு, பிரசங்கம், சொற்பொழிவு, கருத்துரை, பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், சுழலும் சொற்போர் என்று பலப்பல வடிவங்களாக பேச்சுக்கலை வளர்ந்துகொண்டிருப்பதுபோலத் தோற்றம் காட்டி, கருத்துநிலையில் தேய்ந்து கொண்டிருக்கின்றது.

பேசும் பேச்சாளர்களில் பலர் இந்த மண்ணின் உயிர்த்துடிப்பை நாடிபார்த்தறியாது சொற்சிலம்பமாடுகின்றனர். பழைய 'ஆனந்த விகடன்' பகடிகளை தொகுத்தளிக்கின்றனர். எமது தாயகத்தின் உயிரனைய விடுதலைப் போராட்டத்தை உளப்பூர்வமாக ஏற்று அதை மக்களுக்குச் சொல்ல வேண்டிய கடமையுடைய மேடைப் பேச்சாளர்கள் வரலாற்றுப் பணியைப் புறந்தள்ளிவிட்டு மீண்டும் மீண்டும் ''சீதையின் கால் விரல்களை விட கைவிரல்களே அழகானவை'' என்றும், ''வீமனை விட அருச்சுனனுக்கே விலா எலும்பு பலமானது'' என்றும் பட்டிமண்டபம் நடாத்திக் கொண்டிருக்கின்றனர். ''இலக்குவன் சென்றிக்குநின்றான்'' ''இராமன் ஒருகெரில்லாப் போராளி'' என்ற மாதிரி வழக்காடுமன்றம் நடாத்துகின்றனர்.

அண்மையில் ஒரு கோவில் திருவிழா தொடர்விரிவுரையில் 'சொற்பொழிவுத் தென்றல்' ஒருவர், ''கோமாதா பூஜை செய்வதால் பெண்களுக்கு அடக்கப்பண்பும் சாத்விக குணமும் ஏற்படும். கணவனுக்கு அடங்கி வாழும் அழகு வரும். இன்று கோமாதா பூஜையை செய்யாத காரணத்தால்தான் எங்கள் பெண்கள் போர்க்கோலம் பூண்டு நிற்கின்றனர்'' என்று திருவாய் மலர்ந்ததைக் கேட்டு எங்கள் காதுகள் அதிர்ச்சிக்குள்ளாயின; செவிப்பறைகள் அதிர்ந்து ஒரு தடவை அக்கினி பற்றிக் கொண்டது.

''பெண்கள் போராடும் பூமி. புதிய வரலாறொன்றைப் பெண்கள் வடிவமைக்கும் நாடு'' என்று எம்மண்ணைப் பார்த்து உலகம் வாயில் விரலைவைத்து அதிசயித்துவிட்டு, வாழ்த்துப்பாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், இங்கே விதைக்கப்படும் கருத்துக்கள் இப்படி அமைந்தது எப்படி? இதற்கு யார் பொறுப்பு? இவ்வளவு தூரம் உலக ஒத்திசைவுக்கு மாறாக எம்மண்ணின் பேச்சுக்கள் இருக்கின்றனவே என்று வெளிச்சம் வேதனைப்படுகின்றது.

மதத்துக்கோ அல்லது மரபுவழி இலக்கியங்களுக்கோ, திருவிழாவுக்கோ வெளிச்சம் எதிரானதல்ல. ஆனால், இங்கே சொல்லப்படும் கருத்துக்கள் எமது விடுதலைப் போருக்கு ஊறுவிளைவிப்பனவாக அமையக்கூடாது என்று ஒரு தாழ்மையான விண்ணப்பத்தை, பேச்சைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு வெளிச்சம் விடுகின்றது. எழுத்தாளர்கள், கலைஞர்கள் போல் பேச்சாளர்களையும் இணைய வேண்டுமென வெளிச்சம் விரும்புகின்றது. □



# தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும், முழுமையும் கொடுப்பவர்கள் கலைஞர்கள்

தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

உலக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயமாக, இங்கு எமது தாயக மண்ணில், ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்கள் பலர். அவர்களது தனிமனித சரித்திரங்களின் தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது தேசத்தின் தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாகத் தந்துள்ள முல்லை மரவட்ட கலைஞர்களை நான் மெச்சுகிறேன்.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கிய படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வை தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்கசக்தியை ஊட்டுபவர்கள் கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே. இந்த இலக்கில் எமது தேசத்து கலை, இலக்கியப் படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்துவருகின்றனர்.

போராட்ட வாழ்வைச் சித்திரிக்கும் கலைப் பணியில் முல்லை மாவட்ட கலைஞர்கள் முன்னுதாரணமாக நிற்கிறார்கள். முன்னரும் மாவீரர் நாளையொட்டி 'தமிழோசை' என்ற கலைப் படைப்பை உருவாக்கிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தனர். இன்று "இது எங்கள் தேசம்" என்ற அன்னை பூபதியின் வரலாற்றை பின்னணியாகக் கொண்டு இந்தக் கலைப்படைப்பை உருவாக்கியுள்ளனர். இயல்பாகவே கலைஞர்களுடன் மிக நெருக்கமான உறவை வழிவழியாகக் கொண்டிருக்கும் முல்லை மண்ணிலிருந்து வெளிவரும் இந்தப் படைப்பையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். அனைத்து கலைஞர்களையும் பாராட்டுகின்றோம் மேலும், மேலும் இவர்களது கலைப்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

காலத்தின் குரலாக, ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை எதார்த்தமாகச் சித்திரிக்கும் இந்தக் கலையாக்கம் எமது மக்களின் இதயங்களைப் பற்றிக்கொள்ளும் என்பது திண்ணம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

● ● ●

'வெளிச்சம்'
கலை இலக்கிய சமூக இதழ்

அட்டைப்படங்கள்
முன் அட்டைப்ப
பின் அட்டைப்...

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

அச்சு:
ம. மரியதாஸ்

# மாற்றங்கள்

நா. பாஸ்கரன்

''செல்லம்மா........செல்லம்மா......''

பத்திரிகையும் கையுமாக சயிக்கிளைத் தள்ளிக் கொண்டு உள்ளே வருகின்றார், செல்லத்துரை.

செல்லம்மாவுக்கு அதிசயமாக இருக்கின்றது. அவளால் வாய்திறந்து பேச இயலவில்லை. என்றாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு;



''அண்ணை, வாருங்கோ......'' என்று வரவேற்கின்றாள்.

செல்லத்துரை தனது பழைய கம்பர் சயிக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு வந்து அமர்கின்றார்.

செல்லம்மாவுக்கு மனத் துடிப்பை அடக்க முடியவில்லை. அவரின் வருகையின் நோக்கம் அறியும் ஆவல், நெஞ்சிலே உதைக்கின்றது.

''அண்ணை என்ன இந்தப்பக்கம்......?'' தயக்கத்துடனும் ஆவலுடனும் கேட்கிறாள்.

''ஒண்டுமில்லைப் பிள்ளை, நான் உந்த அச்சுவேலி பஸ்ராண்டுக்குப் பேப்பர் எடுக்க வந்தனான். பொடியள் வளலாய் காம்ப் அடிக்கப் போறாங்கள் எண்ட செய்தி அடிபட்டுது; அதுதான் உனக்கும் ஒருக்கால் சொல்லிப் போட்டுப் போவமெண்டு வந்தனான்.''

செல்லம்மாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை; அவர் சொல்வதை நம்பவும் முடியவில்லை. அவள் மௌனமாக அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.

''என்ன நீ யோசிக்கிறாய், அண்ணை என்ன இண்டைக்குப் புதிசாக வந்திருக்கிறார் எண்டே; ஏதோ கொஞ்சக்காலம் விதி என்னையும் உன்னையும் பிரிச்சு வைச்சது உண்மைதான். ஆனால் இண்டைக்கு அந்த விதியின்ரை விளையாட்டை நான் உணர்ந்திட்டன். வெட்டுப்பட்டுக் குத்துப்பட்டு கோடேறித்திரிஞ்சவங்களெல்லாம் இண்டைக்கு ஒண்டுசேர்ந்து நிக்கையுக்கை நாங்கள் மட்டும் சேருறதிலை என்னபிழை.''

செல்லம்மாவுக்கு மனம் நெகிழ்ந்து போகின்றது. ''அண்ணை, ஏன் பழசுகளைக் கிண்டுறியள். உதைவிட்டுட்டு வேறையேதும் புதினங்களைச் சொல்லுங்கோ'' என கனிவாக குழைந்து பேசுகின்றாள்.

''ஆ...... அதுசரி ...... உவன் மோகனை இஞ்சை வைச்சு என்ன செய்யப் போறாய்...? நாளைக்கு ஆமியிஞ்சாலை வந்தால் அவன்ரை கெதியென்ன?''

''அண்ணை நானென்ன செய்யிறது? இந்த வீட்டை வாசலை வித்தெண்டாலும் அவனை எங்கையாவது அனுப்புவமெண்டு தான் பாக்கிறன். ஒருதரும் பெறுமதியில்லையெண்டு காசு தரமறுக்கினம்.''

செல்லத்துரை நிலைமை தனக்குச் சாதக

மாகியுள்ளதை உணர்ந்து, தான் வந்த விடயத்திற்கு வருகின்றார்.

''தங்கச்சி நீ வீட்டை வாசலை ஈடுவைக்க வேண்டாம். நீ விரும்பினால் அவனை என்ரை செலவிலை அனுப்பிறன். நேற்றுத்தான் தமையன் கடிதம் போட்டவன், தங்கச்சிக்குக் கலியாணம் செய்து லண்டனுக்கு அனுப்புங்கோ எண்டு''

''என்னண்ணை சொல்லுறியள்......'' — செல்லம்மா குழம்புகிறாள்.

''எடி தங்கச்சி, அப்பமெண்டால் புட்டுக்காட்டவேணுமே? என்ன சொன்னாலும் உன்ரை மோன் என்ரை மருமோன் தானடி. என்ரை மோளுக்கு முறை மச்சான். அவனிருக்க நான் வேறை இடத்துக்கு எப்பிடிப் போறது? சொல்லு பாப்பம்''

''அண்ணை ஏதோ கடவுள் விட்ட வழி, உதுக்கு நானென்ன மறுப்போ. என்னத்துக்கும் அவன் பொடியனையும் ஒருக்கால் கேட்பம்'' - அவள் மனம் குளிர்ந்து போகின்றது.

''சரிபிள்ளை, பொடியன் என்ன மறுக்கவே போறான்...; எண்டாலும் ஒருசொல்லுக் கேட்டுப் பாரன்...; நான் வாறன்''

எனக் கூறிக்கொண்டு செல்லத்துரையர் புறப்படத் தயாராகிறார்.

''அண்ணை தேத்தண்ணி குடிச்சிட்டுப் போங்கோ .....'' எனக் கூறிக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தவள், அவசர மவசரமாகத் தேநீர் ஊற்றிவந்து செல்லத்துரையிடம் கொடுக்கின்றாள்.

செல்லத்துரையர் தேநீர் அருந்தியபடி 'செல்லம் ஏன் இன்னும் வீடு மேயேல்லை...?'' மீண்டும் அனுதாபத் தோரணையில் கேட்கிறார்.

''அதண்ணை......''— செல்லம்மா தன் இல்லாமையைச் சொல்ல முடியாது தடுமாறுகின்றாள்.

''சரி... சரி ... மழை வந்தால் ஒழுகப்போகுது. என்ரை பின்னாலுக் காணியுக்கை ஓலையை வெட்டி மேய்; நான் வாறன்.'' செல்லத்துரையர் மரத்தடியில் நிறுத்தி வைத்த தனது சயிக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படுகின்றார்.

செல்லம்மாவின் மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறது.

□ □ □

டுடும்... டும் டுடு் டும்...

''ஐயோ வளலாயிலை இருந்து செல்லடிக்கிறாங்கள்; பிள்ளை பங்கருக்குள்ளே போங்கோ... உள்ளுக்கை போங்கோ... உள்ளுக்கை போங்கோ'' என்று கூறிக்கொண்டு, தானும் உள்ளே செல்ல அவதிப்படுகிறாள் செல்லம்மா.

''டும்'' -பேரிரைச்சலுடன் காற்றைக்கிழித்துக் கொண்டு வந்த குண்டொன்று வெடிக்கிறது.

செல்லம்மா இரத்த வெள்ளத்தில் கிடந்து 'தம்பி என்ரை... தம்பி... தம்பி... என்ரை... தம்பி' என அலறுகின்றாள்.

மோகன் செய்ய வேண்டிய முதலுதவிகள் யாவற்றையும் செய்கிறான். பின்பு வைத்தியசாலைக்குக் கொண்டு விரைகிறான்.

செல்லம்மா காயப்பட்ட செய்தி காற்றோடு காற்றாக அயலெங்கும் பரவுகிறது. செல்லத்துரையரும் மனைவி பாறுபதியும் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்து சென்றனர்.

அவசர சத்திர சிகிச்சைப்பிரிவில் அறுவைச் சிகிச்சை முடித்துக்கொண்டு செல்லம்மாவை சத்திரசிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். இப்பொழுதும் செல்லம்மா நினைவு திரும்பாது பினாத்துகின்றாள்.

''உந்த அறுவாங்கள், றக்கோடை கவுளாங்களோ......''

''போறவாற வழியிலை சாகாங்களோ...''

''எங்கடை பொடியளோடை நேருக்கு நேர் மோதப்பயந்து ஷெல்லல்லே அடிக்கிறாங்கள்.''

''வெளிக்கிட்டு வந்தினமெண்டால் கொப்பேக்கடுவவைப் போலத் தான் சாவினம்.''

செல்லத்துரையர் தன் மனைவியை, செல்லம்மாவுக்கு உதவியாக வைத்தியசாலையில் நிறுத்திவிட்டு வீடு சென்றார்.

அவர் மனைவியும் மைத்துனி மேல் பாசங் கொண்டவள் போல அடிக்கடி;

''மச்சாள்... என்னணை வேணும்...''

''மச்சாள் ... என்னணை வேணும், சொல்லுங்கோ'' என்று கரிசனையோடு கேட்டு வேண்டியவற்றைச் செய்துகொண்டிருக்கிறாள்.

செல்லத்துரையர் மூன்று வேளையும் தவறாது வந்து பார்வையிட்டுச் செல்கின்றார்.

சில தினங்களின் பின் செல்லம்மாவுக்கு சுய நினைவு வந்து, பேச ஆரம்பித்துவிட்டாள். தமையனும் மனைவியும் கஷ்டப்பட்டு இப்படி உதவி செய்கின்றபோது, மோகன் தன்னுடன் பேசிக் கொண்டதை நினைத்துப் பார்க்கின்றாள்.

''அம்மா... மாமா எங்களிலை பற்றும் பாசமும் கொண்டு எங்களைத் தேடி வரவில்லை. ரகுவைக் காதலிக்கும் மோகனாவை, ரகுவிலை இருந்து பிரிச்சு எனக்குக் கலியாணம் செய்யலாம் எண்டுதான் வந்திருக்கிறார். ஏனெண்டால் ரகு வசதி குறைஞ்சவனாம். இந்தக்காலத்திலையும் உதை என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது. அதோடை நான் இந்த மண்ணைவிட்டு வெளியேறி அந்நிய மண்ணுக்குப் போகமாட்டேன்.

இண்டைக்கு இராணுவக் கொடுமையாலை எங்களைப்போலை எத்தனையோபேர் தங்கடை குடும்பத்தலைவனை இழந்து கஷ்டப்படுகினம். அப்பிடி கஷ்டப்படுகிற ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கலாம். அதோடை நான் எண்டைக்கும் அந்நிய மண்ணிலை வாழமாட்டன்; இந்த மண்ணிலை தான் வாழப்போறன்...''

''அப்ப ... என்ன சொல்லுறாய் தம்பி....?''

''முடியாதம்மா.......
உன்ரை கொண்ணற்றை எண்ணம் சரிவராதெண்டு சொல்லிவிடு.''

—மோகனின் இந்த முடிவை, எப்படி தமையனுக்குத் தெரிவிக்கிறதுஎன்று நினைத்து இரண்டொரு தினங்கள் கஷ்டப்படுகின்றாள். இறுதியில் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு சொல்லுகிறாள்-

''அண்ணை நான் சொல்லிப்பாத்தன்; அவன் சம்மதிக்கிறான் இல்லை... நானென்ன செய்ய...?''

செல்லத்துரையின் முகம் வாடிவதங்குகின்றது. தனது ஏமாற்றத்தை சகித்துக்கொள்ள முடியாதவராய் ..

''பாறுபதி...... வாடி போவம்...'' என சினத்துடன் அழைத்தபடி அங்கிருந்து வெளியேறுகின்றார்.

செல்லத்துரையர் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற மோகனுக்குச் சிரிப்பு வந்தது.

''மாமாவக்குச் சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லியாச்சு. என்ர நிலை... நான் இனி வாழ்ந்து காட்டத்தான்வேணும். வாழ வேணுமெண்டா, அதுக்கான வழியைத் தேட வேணும். வழி ..எல்லாத்துக்கும் முதல் நிம்மதியாக வாழ வேணுமெண்டா இந்த மண்ணிலை, இந்த மண்ணுக்காக வாழ வேணும்...''

—மோகன் மனதில் உறுதியுடன் ஒருதீர்மானம் பிறந்தது. □□




# எண்பதுகளில் ஈழத்து தமிழ்க் கவிதைகளின்போக்கு

சொக்கன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஒருவரின் மரண நினைவைப் போற்றக் கல்வெட்டுக்களைப் பாடுவித்து வெளியிட்டு வந்த காலத்தை மாற்றிச் சிறுவர் பாடல் நூல்களையும் நினைவு மலர்களாக வெளியிடலாம் என்று வழிகாட்டி அவ்வகையிலும் சிறுவர்பாடல் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வரும் கவிஞர் ஆடலிறை இத்துறையிலே சிறப்பித்துக் கூறப்பட வேண்டியவர். அவர் சிறுவர் பாடல் ஊர்தியைச் சமகாலத்துக்கும் உகந்ததாகப் பயன்படுத்திய முன்னோடிகளிலும் ஒருவராய் விளங்குகின்றார். வானிலே பறந்து வரும் வானஊர்திகளைப் பெரும் பறவைகள் என்று மயங்கிய தன் மகனுக்கு அம்மா வாய் நின்று அவர்தரும் விளக்கம் உள்ளத்தைத் தொடுவதாகும்.

**மகன்:**

அம்மா அம்மா வாருங்கள்
அழகுப் பறவை பாருங்கள்
எம்மா பெரிதாய் இருக்கிறது
இந்த வெள்ளை வான்பறவை
ஒன்று இரண்டு மூன்றம்மா
ஒழுங்காய்ச் செல்லும் நாலைந்து
நன்றாய்த் தெரியும் பாரம்மா
நல்ல பறவை ஆறேழு
வானில் முட்டை இடுகிறது
வானில் முட்டை வெடிக்கிறது
வானில் நூறு குஞ்சுகளும்
சிவந்தே வருதல் பாரம்மா

**தாய்:**

ஐயோ தம்பி உள்ளே வா
அதர்மம் வானில் பறக்கிறது
செய்யாப் பறவை இதுவல்ல
செய்த சண்டைக் கப்பலிது
ஓடி உள்ளே வாதம்பி
உருளும் குண்டு வீழ்ந்திடலாம்
வேடிக் கைநீ பாராதே
விரைந்து பதுங்கு குழிக்குட்செல்
அரசு குண்டு போடுதடா
அதுதன் குடியை அழிக்குதடா
பரவும் கடவுள் அரசிரண்டும்
பாதுகாத்தல் தான்நீதி
ஆண்டவன் ஓர் தீங்கறியான்
ஆள்வோன் தீங்கு செய்கின்றான்
வேண்டாம் என்றால் கேட்பானோ
வெந்தே சாவான் ஒருநாளில்

இப்பாடலிலே வான், அதர்மம், அரசு முதலாம் சொற்களின் எண்ணக்கரு பிள்ளைகளுக்கு கடினமாகவே இருக்கும். ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தின் எதார்த்தத்திலிருந்து அவன் தப்பி ஓட முடியாது. எனவே அவனுக்குக் கசப்பானதாயினும் உண்மை தெரிந்துதான் ஆக வேண்டும் என்பதால், சிறுவர் பாடல் வரிசையில் இப்பாடலுக்கு இன்றியமையாததோர் இடம் இருக்கிறது என்பதை மறுத்தல் இயலாது. இக்காலப்பிரிவில் பதினைந்து, பத்து வயதுச் சிறுவர்களும் பாட்டியற்றி அவை நூல்வடிவில் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்க செய்தியாகும் மௌள சித்தார்த்தன்.

போன்றோர்தாம் அந்தச் சிறுவர்கள். ''மாமா, புலிமாமா, புலிமாமா, நான்வரட்டாபோராட'' என்று தொடங்கும் எழுச்சிப்பாடலையும் சிறுவர் பாடல்களினுள்ளேயே அடக்கல் வேண்டும்.

## இசைப்பாடல்கள்:

மக்களிடையே சென்று அவர்களின் உள்ளத்தைத் தொட்டு உருக்கவும் செயல் உந்தலை அவர்களுக்கு அளிக்கவும் வல்லன இசைப்பாடல்களாகும். பக்தி எழுச்சிக் காலமாகிய பல்லவர்காலத்தில் நாளும் இன்னிசையாலேயே தமிழையும் சமயத்தையும் சமயகுரவர்களும் ஆழ்வார்களும் அணைய விடாது காத்து வளர்த்தனர். ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளான பின்பும் இன்னும் சமய உணர்வையும் பக்தியையும் தம் மக்களிடையே அவர்களின் பாசுரங்கள் கட்டிக்காப்பதற்கு இசையே ஊடகமாய் அமைந்தது என்பதை மறுப்பாரில்லை. இந் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை - ஏன் இன்றுங்கூட - தமிழுணர்ச்சியையும் எழுச்சியையும் தமிழரிடையே வளர்க்கத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இசையையும் ஓர் ஊடகமாக வளர்த்து வருதல் கண்கூடு. இவ்வகையில், றோமாபுரி பற்றியெரிகையிலே நீரோமன்னன் பிடில் வாசித்தது போன்று இசையிலேயே தம்மை இழந்து பிறவற்றை மறந்து போகாத தமிழீழ விடுதலைப் புலிகள் போரை ஒருபக்கம் நடத்திக்கொண்டே தம் நோக்கத்தை நிறைவேற்ற மக்களை அணிதிரட்டும் வகையில் இசையோடு, நாடகம், தெருக்கூத்து முதலாம் கலைவடிவங்களையும் பயன் செய்து வருவது பாராட்டத் தக்கதே. ஈழம் தன்னைப் பீடித்த கலியெல்லாம் தொலைந்து கட்டறுத்து விடுதலைப் பரணி பாடுகையில், இந்த நுண்கலைகளும் அறாத்தொடர்புடன் ஈழத்தவரிடையே இலங்கும் என்பதற்கு ஐயமில்லை. இவ்வெழுச்சிப்பாடல் மழலை மாறாத மதலைகளினூடேயேயும் உணர்ச்சியை மிகுதியும் எழுப்புவதற்குப் பின்வரும் எடுத்துக்காட்டே சான்றாகும்.

''இந்தமண் எங்களின் சொந்த மண்'' என்று பாடினான். ஐந்து வயதில் பாலகன் கிணற்றுக்குள் தவறி விழுந்து மயக்க நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் போதும், ''எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறேன்'' என்று பாடியபடியே இறந்து போனான், பன்னிரண்டு வயதுப் பையன். தேசபக்தியை, வீர உணர்வை இளநெஞ்சங்களில் ஊட்டி விட்டது. இந்தப் பாடல்களுக்குக் கிடைத்த வெற்றி.

தமிழே உயிர்மூச்சாகவும் தமிழரின் மண்மீட்பே பிறப்பெடுத்த பயனென்றும் வாழ்ந்து வரும் மாமனிதர் கவிஞர் காசி ஆனந்தனின் இந்த எழுச்சிப் பாடல், போராளிகளின் கடினமான வாழ்வைமட்டு மன்றித் தமிழர் தம் உயர் பண்பாகிய நன்றிமறவாமையையும் நெஞ்சைத் தொடும் வகையிலே புலப்படுத்துகிறது.

*அடைக்கலம் தந்த வீடுகளே*
*போய்வரு கின்றோம் நன்றி - நெஞ்சை*
*அடைக்கும் துயர்சுமந்து செல்கின்றோம்*
*உங்கள் அன்புக்குப் புலிகள் நன்றி*
*(அடைக்கலம்)*

*நாங்கள் தேடப்படும் காலத்தில் நீங்கள்*
*கதவு திறந்தீர்களே - எமைத்*
*தாங்கினால் வரும் ஆபத்தை எண்ணிப்*
*பார்க்க மறந்தீர்களே ..... பார்க்கமறந்தீர்*
*களே (அடைக்கலம்)*

*எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி*
*உங்கள் சோறல்லவா... உங்கள் சோறல்*
*- லவா......*
*நாங்கள் தங்கியிருந்த நாள் சிலநாள்*
*- என்றாலும்*
*நினைவு நூறல்லவா?*
*(அடைக்கலம்)*

பெற்றோரை உறவைப் பிரிந்திருந்தோ
அந்த இடத்தை நிறைத்தீர்களே
முற்றுகை நடுவில் மூடி எமையுங்கள்
சிறகால் மறைத்தீர்களே......... சிறகால்
- மறைத்தீர்களே
(அடைக்கலம்)

கவிஞர் புதுவையிடம் "இதுவரை எழுச்சிப்பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள் எத்தனை வெளியாகியிருக்கும்?" என்று கேட்டேன். "பதினைந்து இருக்கும்" என்றார். உண்மையில் இது மகத்தான சாதனைதான். காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை, யோகி ஆகியோரிலே தொடங்கி அண்மையிலே பெண்போராளிகள் வரை இந்த இசைப்பாடல் யாக்கும் மரபு தொடர்வதும் குறிப்பிட வேண்டிய ஒன்றே.

## ஆன்மிகம், இறையியல், பழமை சார் ஆக்கங்கள்:

தமிழர்தம் பண்பாட்டின் முதன்மைக் கூறுகளாக ஆன்மிகமும், இறையியலும் பழமை போற்றும் பண்பும் விளங்குகின்றன. கோயிலும் நாசுரங்களும், சாத்திர நூல்களும் புராண இதிகாசங்களும் நாத சுரமும் தவிலும், பண்ணிசையும் விரதமும் ஆசாரங்களும் எந்தச் சூழ்நிலையிலும் கைநெகிழ்த்தற்குரியனவல்ல, என்பதிலே ஈழத் தமிழருக்கு பெரும்பாலானவருக்கு இன்னும் நம்பிக்கை குடிபோய்விடவில்லை. இதற்கு இங்கு நான் தந்த முற்கூறிய மூன்றமிசங்களும் சார்ந்த நூல்களின் தொகையும் ஒரு சான்றாகும். இவற்றை இயற்றியவர்களிற் சிலர் பண்டிதர்கள். பலர் மரபுவழிக்கல்வியின் பலத்தினை முழுமையாகப் பெறாவிட்டாலும் பழமையின் நலங்களைப் போற்றி அவற்றிற்கு வடிவம் கொடுக்கத் தக்க அநுபவமும் ஆற்றலும் கொண்டவர்கள். சமகாலத்திலிருந்து பெருமளவு விலகி நின்று பழமையில் இனிமையும் தெய்விகத்தில் பற்றுறுதியும், ஆசாரங்களிலே கடைப்பிடியும் கொண்டவர்களாயினும் இவர்களிற் சிலரையாவது சமகால நிலைமைகள் பாதித்து உணர்ச்சியைத் தூண்டத் தவறவில்லை. இதற்குப் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டு.

நாடுகள் பற்பல ஓடியும் செல்வங்கள்
நந்தமக் கில்லையென் றயராதே
நந்தமி ழீழத்திற் செந்தழல் பற்றியே
நாமழி வதனுக்கும் குலையாதே

பாடுகள் துயரங்கள் வந்தெமைச் சூழவும்
பலவித மாயெண்ணி இளையாதே
பாலகர் இளையவர் முதியவர் பெண்டிர்
- கள்
பலியடை வதனுக்கும் கதறாதே

வீடுகள் இடிந்திட வேதனை மிக்கெழ
விழுந்துமண் மீதினிற் புலம்பாதே
வேற்படை யுடையவன் அருகினில்
- உளனென
மிகுதியும் விசுவசித் தவன்பாதம்

ஆடியும் பாடியும் தொழுகுவம் வினைவலி
அகன்றிடும் மகிழ்வரும் ஒருநாளில்
அமைதியைப் பெறுகுவம் நகர்நல்லைப்
- பதியினில்
அமர்ந்துளன் கந்தனாம் பெருமானே

இப்பாடலில் ஈழத்தவரின் அவலநிலை கூறப்படுகிறது. ஆனால் அதன் விடிவிற்கு நல்லை முருகனை வேண்டிநிற்கும் புலவர், எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கின்ற நினைப்பினால், அவர்களுக்கு அறிவுறுத்தும் வகையினால் பழமை பேணுபவராயிருந்தும், அவர் கொண்ட கருப்பொருளில் ஓரளவு புதுமையும் உண்டு என்பதற்கு ஐயமில்லை. பண்டிதர் மு. கந்தையா, சம்பந்தன், பண்டிதர் சோ. தியாகராசா, பாவலன் பா. சத்தியசீலன், ச. வே. பஞ்சாட்சரம், ஈழத்துப்பூராடனார்

சொக்கன், நாக. பரமசாமி, தேவமதுரம் முதலியோர் இந்த மரபைப் பேணிக் கவிதைகள்யாத்துவருகின்றனர்.

## தொகுப்புரை:

வானில் எவ்வளவு தொலைவுதான் பறந்தாலும் பருந்து மண்ணையே இறுதியில் நாடிவருவது போல, எவற்றைப் பாடினாலும் அவையெல்லாம் தமிழீழத்து அவலங்களையும், அவற்றைப் போக்க வேண்டும் பேரவாவினையும் அப்பேரவாவினைச் செயற்படுத்தும் துடிப்பாகவுமே 1980—1990 ஆண்டுக்காலக் கவிதைகள் விளங்குகின்றன என்பதே இந்த ஆய்வு காட்டும் உண்மையாகும்.

இக்கட்டுரை 80களின் தமிழ்க் கவிதை பற்றிய ஆய்வின் ஒரு முன்வைப்பு மட்டுமே, இது தொடர்பான விமர்சனங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய விடயங்களையும் எழுதுங்கள்; வெளிச்சம் பிரசுரிக்கும்.

— ஆசிரியர் குழு —

பத்திரிகைகளில் எழுதுபவர்கள் பொறுப்பில்லாமல் எதையும் எழுதக்கூடாது. அப்படிப் பொறுப்பில்லாமல் சமுதாயத்திற்குக் கெடுதி விளைவிக்கக்கூடிய விஷயங்களை எழுதுபவர்களின் எழுத்துக்களைப் பத்திரிகை ஆசிரியர்கள் போடக்கூடாது உள்ளத்தில் உண்மை உண்டாயின் வாக்கில் உண்மை உண்டாகும் என்று பாரதி சொன்னார். அந்த உண்மையை ஏற்றுக் கொண்டு செயல்பட பத்திரிகைகள் முயலவேண்டும். வெறும் வியாபார நோக்கத்துடன், பத்திரிகைகளில் எழுதுபவர்களோ, பத்திரிகை வெளியிடுபவர்களோ செயல்படக்கூடாது. விவாதங்கள் என்ற போர்வையில் பட்டிமன்றங்களுக்கும் கீழேபோய்விடுகிற விஷயங்களைக் கிளறிவிடப் பத்திரிகைகள் முயலக்கூடாது. பத்திரிகைகள் நல்ல எழுத்தைத் தேடிப்பிரசுரிக்கவும், நல்ல எழுத்தைத் தேடிக் கண்டுகொள்ள வாசகர்களுக்கு உதவவும் வேண்டும். எழுத்தில் நல்லதரத்தை எட்டாத விஷயங்களை எந்தப் பத்திரிகையும் வெளியிடக்கூடாது என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

நா. சுப்பிரமணியம்

குப்பி விளக்கென்றாலும் விடிவிளக்கொன்று
இனி எப்போதெரியும்
என் வீட்டில்?
பாலாய் ஒளியூற்றிச் சுடரும்
மின் குமிழ்கள்
இனியென்று ஒளிபரப்பும் எனது வீதிகளில்?
சிறுதளிர்களும் பூக்களும் சேர்ந்த
காற்றென்று வரும் என்சுவாசத்துக்கு?
கந்தக நெடில் பரவி
குமட்டல் எழும் இந்த இரவும்,
துயிலமறுத்து விழித்திருக்கவே
எச்சரிக்கும் மனமும் இன்னும்
எத்தனை நாளில் தொலைந்து போகும்?




## சிக்கல் நாளின் வலிதீருதல்

கருணாகரன்

விழித்திருக்கையிலும்
விசமேறிய கனவுகள்
என் நம்பிக்கைகளைத் தின்னுகின்றன;
நடுங்குகின்ற காற்றில்
துர்நாற்றம் வீசி என் சரீரம் எரிகிறது
எப்போதும் இரவுகளில்
திடீர் திடீரென
அவசரமாகப் பிள்ளையைத் தொட்டுப்பார்த்து
அவதியுறும் துயர்
ஐந்து வயதுக் குழந்தையின் நாளைபற்றியது;
அவனது எதிர்காலம்
என்னவென்று நிச்சயிக்க முடியாதுள்ளது
அவனைப் பற்றிய திட்டங்களை
நினைக்கவே தடுமாற்றமாயுள்ளது.

எல்லாக் கேள்விகளுமே
பின்னலிடுகின்றன
எல்லாவற்றையும் விடச் சிக்கலானதாக
விமானங்கள் பயணிகளையும்
ஏற்றிச் செல்லுமென்று
குழந்தைக்கு எப்படி
நம்பிக்கைகொள்ளவைப்பதென்று
புரியவில்லை எனக்கு.
முகம் வெடித்த மனிதனாக
எனது பிம்பம்
என்னைக் காட்டுகிறது
இப்படி வாழுதல் என்பதும், மரணம் என்பதும்
நள்ளிராப் பொழுதில்
வழியற்றிருக்கையில்
காட்டெருமை துரத்துவதைப் போல
நெரிக்கின்றன.

எனது அயலில்
காற்றில் உயிர்க்கும் நம்பிக்கைகள் பெற்ற
அற்புத மனிதர் போல
போராளிகள் செல்கிறார்கள்.
நின்று, பேசி, விடைபெற்று
வழிநெடுகப் புன்னகை மலர்த்தி
நம்பிக்கை மனிதர் செல்கிறார்.
எத்தனை தளிர்ப்புடன்
எனது பிள்ளை
அவர்கள் கைபற்றிப் பூக்கிறான்.
முகம் வெடித்த மனிதனாக
எனது பிம்பம்
என்னைக் காட்டுகிறது.

சிக்கல் நாளின் வலிகள் தீர
நம்பிக்கை மனிதர் கைகள் பற்றி
நடத்தல் வேண்டுமென்று துருதுருக்கிறது
வாழ்க்கையின் அழைப்பு. ▢▢

PUBLIC LIBRARY,
JAFFNA,

# பலூன்

த. கலாமணி



என் உள்ளம் குமுறிக்கொண்டிருக்கின்றது.

இவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது?

— 'மழலைகள் மனித சமுதாயத்தின் சிற்றுருக்கள் அல்லர்' என்ற உளவியற் பரிபாஷையிலா?

தமது அபிலாஷைகளை எல்லாம் இந்தப் பிஞ்சுகளில் ஏற்றி இவர்கள் எதனைச் சாதிக்க விரும்புகிறார்கள்? குழந்தைகளின் உலகமே வித்தியாசமானது என்பதை இவர்கள் அறிய மாட்டார்களா?

குழந்தைகளின் உலகத்தைப்பற்றியே தெரியாதவர்களுக்கு என் உள்ளக் குமுறல் எப்படி விளங்கப்போகிறது?

எத்தனை தரம் சொல்லியிருப்பேன், 'நீங்கள் நினைப்பதுபோல இது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியமில்லை' என்று.

இவர்களுக்கெல்லாம் இதனைப் பற்றிய அக்கறையே இல்லை. இவர்களுக்கு வேண்டியதெல்லாம் கௌரவமும் அந்தஸ்தும் தான். இந்தப் பிரதேசத்திலேயே சிறந்த சங்கம் தங்களுடையது தான் என்று காட்டிவிட வேண்டும்; மாதிரிக்கிராம அபிவிருத்திச் சங்கம் என்ற முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

'இவர்களும் இவர்களின் சங்கமும் பட்டபாடு' என்று அனைத்தையும் துறந்துவிட்டு என்றோ ஓடியிருக்க வேண்டும். இப்பொழுதும் கூட, எடுத்த காரியத்தை முடிக்கவேண்டுமே என்பதனால் தான் பல்லை இறுக்கிக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் இவர்களின் செய்கைகளை எல்லாம் பார்க்கும்போது இந்தக் கணமே ஓடி விடலாமா என்று தான் தோன்றுகிறது.

இந்த வேலையை விட்டு விட வேண்டுமென்று இதுவரை எத்தனை தடவைகள் எண்ணியிருக்கின்றேன் என்பதை நினைத்துப்பார்க்கும்போது, என் இயலாமை குறித்து எனக்கே என்மீது வெறுப்பாகவும் வருகிறது.

இவ்வாறு எண்ணுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னைச் செயலில் இறங்கவிடாது தடுத்து நிறுத்தி மீண்டும் இந்தக் கட்டுக்குள் கொண்டு வந்து விட்டுவிடுகின்ற என் பிள்ளைகளின் அன்பையும் என் கணவரின் அன்புக் கட்டளையையும் நினைத்துப் பார்க்கிறேன்.

என் பிள்ளைகளுக்காக என் மனம் அழுது அரற்றிக்கொண்டிருப்பது இவர்களுக்கு எப்படித் தெரியப்போகிறது?

'ரீச்சர், ரீச்சர்' என்று மழலையில் கூவி, என் பின்னால் இழுபறிப் பட்டுத் திரிந்த பிள்ளைகளை எல்லாம் 'கொற கொற' என்று கைப்பிடியாக இழுத்துச் சென்று அவரவர் இல்லங்களில் அடைத்துவிட்ட 'மாதர் அபிவிருத்திச் சங்கத் தொண்டர்களின்' செய்கை கண்முன்னால் ஊசலாடுகிறது.

பாலர்களுக்குள்ளும் போட்டியா? அவர்களுக்கு இல்லம் வேறா?

பாலர்களுக்கு வேண்டியதெல்லாம் அவரவர் செய்கைகள்தாம். தங்கள் செயல்களை தம் இஷ்டப்படி தாமே செய்ய வேண்டும்.

அந்தச் செயல்களை ரீச்சர் பார்த்துப் பாராட்டிவிட்டால் போதும், அவ்வளவு தான்; குதூகலித்துக்கொண்டு பூச்சிகளாய்ப் பறப்பார்கள்.

இவற்றையெல்லாம் ஆற அமர இருந்து சிந்திக்க இவர்களால் முடியுமா?

இவர்களுக்கு, இந்தப் போட்டிகளை, விதிமுறை தவறாது நடாத்தி முடித்துவிட வேண்டும் என்ற தவிப்பு;

ஒலிம்பிக் போட்டியொன்றை நடாத்துகின்ற ஏற்பாடுகளுடனும் கவனத்துடனும் இப்போட்டியை நடாத்தி முடித்து, அந்த நிர்வகிப்பைக் கண்டு பிரதம விருந்தினர்களாயும், சிறப்பு விருந்தினர்களாயும் வந்திருப்பவர்கள் பாராட்ட வேண்டுமே என்ற அங்கலாய்ப்புடன், இவர்கள் எல்லோரும் ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

பிள்ளைகளுக்குத்தான் திண்டாட்டம். இதுநாள்வரை அவர்கள் காணாத புதுமுகங்களைக் கண்டு மிரள்வதும் அழுவதுமாக இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் பிள்ளைகளுடன் ஆரம்பிப்பாளர்கள் திண்டாடிய வேளையிலும் என் சொல்லைக் கேட்ட பின்தான் பிள்ளைகள் எல்லோரும் வரிசையாகவும் ஒழுங்காகவும் வந்து நின்றார்கள்.

அதுவே எனக்குக் கிடைத்த ஒரு வெற்றிதான். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம்போல என் சொல்லைக் கேட்டு பிள்ளைகள் எல்லோரும் ஒத்திசைந்த போது இங்கு நின்றவர்கள் எல்லோரும் மலைத்துத்தான் போய்விட்டார்கள்.

அதற்குப் பின்பாவது இவர்கள் என்னைச் சுயமாக இயங்க விட்டிருக்கலாம். ஆனால் இவர்கள் அதைத் தங்களுக்கேற்பட்டக்கூடிய பெரிய தோல்வியாகக் கருதியிருக்க வேண்டும். அதனால் தான் என்னவென்னவோ சொல்லி என்னை பின்தள்ளப் பார்த்தார்கள்.

"ரீச்சர், பெற்றார் எங்களைக் குறை சொல்லுவினம். நீங்கள் ஒன்றும் விளையாட்டுத் தொடங்கிற இடத்துக்கோ, முடியிற இடத்துக்கோ போக வேண்டாம். அடுத்தடுத்த விளையாட்டுகளுக்கு பிள்ளையளைத் தயார்ப்படுத்தி அனுப்பினால் போதும்..."

தலைவியின் நாசுக்கான வார்த்தைகள் நாராசமாய் என் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இவர்கள் தான் போகட்டும். இந்தப் பெற்றோர்களுமா இப்படி மாறிவிட்டார்கள்; இந்தப் பெற்றோர்களுக்குமா என்னை விளங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த விளையாட்டு விழாவுக்கென பிள்ளைகளுடன் நான் எவ்வளவு தூரம் பாடுபட்டு வந்தேன் என்பதையும்தான் ஒவ்வொருநாளும் கண்டு வந்தார்களே.

இந்த விளையாட்டு விழாவின் நோக்கமே மாறிவிடக்கூடாது என்பதற்காக இப்பெற்றோர்களை அழைத்து எவ்வளவு தூரம் இந்த விழா பற்றி விளக்கியிருந்தேன். அப்படியிருந்தும் எப்படி இன்று இவர்களால் தங்களுக்குள் போட்டிபோட முடிகிறது. தங்கள் தங்கள் பிள்ளைகளுக்காகவும் அவரவர் இல்லங்களுக்காகவும் இத்தனை கூப்பாடு போடுகின்ற இப்பெற்றோரை எண்ணும் போது எனக்கு மலைப்பாக இருக்கிறது.

பெற்றோரைக் குறைசொல்லியும் பயனில்லைத்தான். அவர்களை அழைத்து, விசேட கூட்டமும் நடத்தி, இந்த விளையாட்டு விழாவை பெரிய போட்டியாக நடாத்துவதற்கு அப்பெற்றோரின் ஒத்துழைப்பையும் கோரியிருந்த மாதர்சங்க நிருவாகம் தான் அவர்களை இவ்வளவு தூரம் மாற்றியிருக்கின்றது.

''நீங்கள் ஒருவரும் குறை சொல்லாத அளவுக்கு இந்த விளையாட்டுப் போட்டியை நடாத்தி முடிக்கவேணும். அதனாலைதான் நாங்கள் இந்த ஊரிலையிருந்து ஒருத்தரையும் எடுக்காமல் பிறஊர்களிலையிருந்து மத்தியஸ்தத்துக்கு ஆட்களை எடுத்திருக்கிறம்'' என்று தலைவி சொன்ன போது அதன் உள்நோக்கத்தை அறியாதவர்களாக பெற்றோரும் தலையாட்டத்தான் செய்தார்கள்.

பெற்றோர்களுக்கு எங்கே தெரியப்போகிறது, இவை எல்லாமே தமது சங்கத்தைப் பிரபல்யப்படுத்த இவர்கள் எடுக்கின்ற முயற்சி தான் என்று.

இவர்களுக்கெல்லாம் கட்டுப்பட வேண்டும் என்று எனக்கு என்ன தலையெழுத்தா? அதனால் தான் இந்தப் போட்டி முடிந்த கையோடேயே என் வேலையையும் விட்டுவிடுவதாக எண்ணியிருக்கிறேன்.

இந்த முறை என் கணவரும் என் முடிவை ஆதரித்துத்தானாக வேண்டும். இன்றைய நிகழ்வுகள் எல்லாம் தான் நிதர்சனமாகத் தெரிகின்றனவே.

இந்த விழாவின் ஆயத்தங்களுக்கான விசேட கூட்டத்தில், 'இந்த விழாவைப் போட்டியாக்காதீர்கள்' என்ற என் கருத்தை, மாதர் அபிவிருத்திச் சங்க நிருவாகிகள் ஏற்றுக் கொள்ளாதபோதே எனக்குத் தெரிந்து விட்டது, இவர்களுடன் ஒத்துப்போக முடியாதென்று. அன்றைய கூட்டம் முடிந்து வீட்டுக்குச் சென்று அன்றைய கூட்ட நிகழ்வுகளை எல்லாம் என் கணவருக்கு எடுத்துக்கூறி, இந்த வேலையை விட்டுவிடப் போவதாக என் கணவரிடம் முன் அறிவித்தல் கொடுத்ததும் ஒரு வழிக்கு நல்லது தான்.

இன்றைய விழாவின் போக்கை அவரும் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ளாமலா இருக்கப் போகிறார்?

என் கணவர்மீது கூட எனக்கு இன்று கோபம் கோபமாகத்தான் வருகிறது. இவராவது எனக்கு அனுசரணையாக நாலு வார்த்தை சொல்லலாமே.

அதுதான் இல்லை. இங்கு நடக்கின்ற அநியாயத்தை எல்லாம் பார்த்தீர்களா என்று இரக்கத்துடன் அவரை நான் பார்க்கின்ற ஒவ்வொரு வேளையிலும் என்னைப் பரிவுடனாவது பார்க்கவேண்டுமே. மாறாக, ஒவ்வொரு வேளையிலும் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொள்ள வேண்டுமா?

சிரிப்பு, என்ன சிரிப்பு. இந்த நேரத்தில் என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது. என் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைக் கண்டும்-என் முகவாட்டத்தைக் கண்டும் இவரால் எப்படிச் சிரிக்க முடிகிறது? குறுந்தாடியையும் வருடிக்கொண்டு, அது என்ன சிரிப்பு?

இந்த நேரத்தில் மட்டுமா? எனக்கும் இவருக்கும் உள்ள விருப்பத்திற்குக் குறுக்காக நின்ற என் பெற்றோரையும் உதறித் தள்ளிவிட்டு இவரிடம் ஓடிவந்து, இவரின் குடும்ப நிலையைக் கண்டு 'அவசரப்பட்டு விட்டோமே... சிறிது காலம் பொறுத்திருக்கலாமே' என்று நான் செய்த தவறை உணர்ந்த வேளை...

திருமணம் முடிக்காத இவரின் சகோதரிகளுக்கு மத்தியில் கும்மாளம் அடிக்க வந்துவிட்டா ராசாத்தி என்று காதுபடவே அயலவர்கள் குத்தலாகக் கதைத்தவேளை...

குடும்ப நிலைமையை அனுசரித்து எமக்குள்ளேயே கட்டுப்பாட்டை விதித்துக்கொண்டு நான்கு வருஷ தாம்பத்திய வாழ்வையும் நெருப்பாறைக் கடப்பதுபோல வாழ்ந்து வருகையில் 'குழந்தை இல்லாத மலடியாக்கும்' என்று ஊரவர் பழி சுமத்திய வேளை...

இந்த ஊரின் மாதர் அபிவிருத்திச் சங்கம் நடாத்துகின்ற பாலர் பாடசாலையின் ஆசிரியையாகி, இவரின் செலவிலேயே பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சியையும் முடித்து, இப் பாடசாலைப் பிள்ளைகளுடன் அன்னையாகவும் தந்தையாகவும் தோழியாகவும் ஆசானாகவும் சேவகனாகவும் என்னைப் பிணைத்துக் கொண்டபோதும் 'நிருவாகம்' என்ற கவசத்தைப் பூண்டு, மாதர் அபிவிருத்திச் சங்கம் என்னை அதிகாரஞ் செய்கின்ற வேளை...

இப்படி எத்தனை, எத்தனை. இந்த ஒவ்வொரு வேளையிலும் நான் வருந்தியதை உணர்ந்தபோதும் என்னைப் பார்த்து இவரால் எப்படிச் சிரிக்க முடிந்தது?

சிரிப்பு என்பது, பரிவு என்று இவரின் அகராதியில் அர்த்தமாக இருக்கலாம். எந்த ஒன்றுக்கும் கலங்காத உறுதி இவரிடம் இருக்கலாம். ஆனால் நான்...

எங்களுக்கென்றொரு குழந்தையைப் பெற்றுக்கொண்டாலென்ன என்று நெஞ்சில் ஆசை முகிழ்க்கின்ற வேளை, 'இந்தப் பாலர் பாடசாலைப் பிள்ளைகள் எல்லாமே உன் பிள்ளைகள் தானே' என்று ஆதரவாகக் கூறி சகோதரிகளின் திருமணம் முடிகின்றவரை பொறுத்துக் கொள்ளச் சொல்கின்ற இவரின் சாமர்த்தியம்...

பாலர்களுக்குப் பாடம் போதிப்பதானால் பிள்ளைகளைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம் என்று சொல்லி, 'குழந்தை உளவியல் பற்றிய போதனையையும் செய்து, எந்த எந்த நேரத்தில் எப்படிப் பிள்ளைகளுடன் நடந்து கொள்ளவேண்டும் என்றெல்லாம் குழந்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவதுபோல விளக்கமாகச் சொல்லித் தருகின்ற லாவகம்...

இலட்சிய வாழ்விலே அடியெடுத்து வைக்கின்றவர்களுக்கு துன்பம் ஒரு பொருட்டல்ல என்று சித்தாந்தம் பேசுகின்ற தெளிவு...

'விரலுக்குத் தகுந்த வீக்கம்' என்பதுபோல தன் வல்லமைக்குப் பொருத்தமான இடங்களில் பேசி முடித்துத் தம் சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் மணம் முடித்துக் கொடுத்து வருகின்ற உலகானுபவம்...

இவை எல்லாமே இவர் மீது என்னைப் பிரமைகொள்ளத்தான் செய்கின்றன. இவருக்காக... இவரின் ஒரு சொல்லுக்காக... இவர் என்மீது காட்டுகின்ற பரிவுக்காக, எல்லாவற்றையும் நான் பொறுத்துக் கொள்ளலாம் தான். ஆனால் இந்த ஒரு விடயத்தில் மட்டும் என்னால் இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது. நான் என் முடிவை இன்று இவரிடம் சொல்லத்தான் போகின்றேன். ஏன், இவரும் தான் இன்றைய நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டு வருகின்றாரே.

'ரீச்சர், ஆரம்பிக்கின்ற இடத்துக்கோ முடிவடைகின்ற இடத்துக்கோ போக வேண்டாம்' என்று தலைவி சொல்வது ஒருபுறம் இருக்கட்டும்; ஆனால் முறுக்கு மீசைகளுடன் கூடிய இரு கிங்கார்கள்தான் ஆரம்பிப்பாளராக அமைய வேண்டுமா?

அதுதான் போகட்டும். அழகு ராணிப் போட்டிக்கெனத் தம்மை அலங்கரித்துக் கொண்டவர்கள்போல வந்திருந்து, அலுங்காமல் நலுங்காமல் நளினம் காட்டுகின்ற இந்த நவநாகரிகப் பெண்கள் தான் மத்தியஸ்தம் வகிக்கவேண்டுமா?

மத்தியஸ்தம் சரியில்லை என்று கொக்கரித்து, குழந்தைகளின் விளையாட்டு என்பதையும் மறந்து, விளையாட்டு விதிமுறைகளில் நுணுக்கம் காட்டி, நடாத்தி முடிந்த விளையாட்டுக்களையும் திரும்ப நடாத்த வேண்டும் என்று குழப்பம் விளைவிக்கின்ற இந்தப் பெற்றோர்களைக் காணக் காண எனக்கு எரிச்சலாக வருகிறது.

பிள்ளைகளுக்குப் போட்டிமுக்கியமல்ல; அவர்களுடைய பங்குபற்றல் தான் முக்கியம் என்று எடுத்துச் சொல்லி, பெற்றோர்கள் எல்லோரையும் முன் எச்சரிக்கை செய்து, இந்தப் பாலர் விளையாட்டு விழாவை ஒரு போட்டியாக மாற்ற விடாமல் நான் எடுத்துக்கொண்ட முன்எத்தனங்களையும் மீறி, இந்தப் பெற்றோர்கள் இப்படிக் குழப்பம் விளைவிக்கிறார்களேயென்றால், இவற்றுக்கு எல்லாம் சூத்திரதாரிகள் இந்த நிருவாகிகள் தான்...

இவர்களுக்கு அழகுணர்ச்சியே இல்லையா?

விளையாட்டுக்கள் ஒவ்வொன்றும் அழகாகவும் ஒழுங்காகவும் இருக்க எண்ணி, பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தாராபோல் குறுநடை பயில விட்டு, யானைபோல் அசைந்தாடி நடக்கவிட்டு, முயல்போல் குதித்துக் குதித்து ஓடவிட்டு, பிள்ளைகளின் செய்கைகளிலெல்லாம் அழகு கூட்டி, கனகச்சிதமாகப் பயிற்சி அளித்து பிள்ளைகளைத் தயார்ப்படுத்தியிருந்தேனே இந்த அழகையெல்லாம் எப்படி இவர்களால் சிதைக்க முடிந்தது...?

இன்று தவளைப் பாய்ச்சலா வைத்தார்கள் அல்லது தாரா நடை பயிலவா விட்டார்கள். அது தான் இல்லையே. பெற்றோர்களும் பார்வையாளர்களுமாகச் சேர்ந்து, ஒவ்வொரு விளையாட்டையும் ஓட்டப் போட்டியாகத்தானே முடித்தார்கள்.

தாரா நடை பயின்ற பிள்ளைகளில் இருவர் ஒரே நேருக்கு மெது மெதுவாக சிறுநடையில் அழகு நடை

நடந்துவந்தபோது, முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்கள் முடிவிடத்தை அடைந்து விட்டார்கள் தானேயென்று விளையாட்டை முடித்துக்கொண்டு, அந்த மழலைகள் இருவரையும் நடைபயின்று முடிக்க விடாது இடையிலேயே தூக்கி அப்புறப்படுத்திய மாதர் சங்கத் தொண்டர்கள் கூட 'நிருவாகத்தின்' பணிப்பின் பேரில்தானே இயங்கினார்கள்.

இவை எல்லாம் தான் போகட்டும். பலூன் உடைக்கும் விளையாட்டுக்கு என்று மட்டும் என் சொந்தச் செலவில் எத்தனை பலூன்கள் வாங்கியிருப்பேன். இரண்டு பெட்டிகள் நிறைய பலூன்களை எடுத்துச்சென்று, பலூன் ஊதி உடைக்கப் பயிற்சி கொடுத்து, உடைத்தபின்பும் வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஒவ்வொரு பலூன் கொடுத்து, ஒவ்வொரு பிள்ளையையும் கொண்டு பலூனை உடைப்பித்து அவர்களின் திறமைக்காக அவர்களையே கைகொட்டி மகிழச் செய்து, விளையாட்டு விழாவிலும் எல்லாப் பிள்ளைகளும் பலூனை ஊதி உடைக்க வேண்டும் என்று சொல்லியிருந்தேனே. இவற்றை எல்லாம் பெற்றோர்களும் தான் கண்டு வந்தார்களே. விளையாட்டுப் பழக்கத்தின் போதும் போதனை வேளைகளிலும் இந்த நிருவாகிகள் வந்து பார்த்திருந்தாலல்லவா அவர்களுக்கு இவை எல்லாம் விளங்கும்?

முதல் மூன்று பிள்ளைகள் பலூனை ஊதி உடைத்ததுமே, ''நேரம் போயிட்டுது; மற்றப்பிள்ளையளை உடைக்காமலே பலூனைக் கொண்டு போகச் சொல்லுங்கோ'' என்று சொல்லி, தொண்டர்களை அனுப்பி பலூன்களைப் பறித்துக் காற்றுப்போகச் செய்து, மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி பிள்ளைகள் மீது தம் பரிவைக் காட்டியதைக் கண்டு என் உள்ளம் உடைந்தது, இவர்களுக்கு எப்படித்தெரியும்?

குழந்தை சுதாவை நினைத்துக் கொள்கின்றபோது எனக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வருகின்றது.

பலயீனமான குழந்தை என்று மற்றையோர் கணிப்பிலுள்ள அந்தக் குழந்தைக்குக்கூட நம்பிக்கையூட்டி, கூடவே சேர்ந்து பலூன் ஊதி, அந்தக் குழந்தையைக்கொண்டே பலூனை ஊதி உடைக்கச் செய்து, அந்தக் குழந்தையிடம் பொங்கும் மகிழ்ச்சியில் நான் அனுபவித்த சந்தோஷம் நினைவுக்கு வந்து என்னை என்னவோ செய்கிறது. காற்றுப்பொறித்த பலூனைப் பெற்றுக் கொண்டு, சுதா என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே. அப்பப்பா...

நேரம் போய்விட்டதே என்று இத்தனையும் செய்து முடித்தவர்கள், பேச்சுப்பேசி ஏன் இப்படி நீட்டி முழக்க வேண்டும்.

பிள்ளைகளிற் பலருக்கு நித்திரை வந்திருக்கவேண்டும். கண்களில் சோர்வு தெரிகிறது. அது இவர்களுக்குத் தெரிந்தால்தானே. முதலில் பரிசளிப்பை முடித்துவிட்டுப் பேசலாமே என்ற என் ஆலோசனையைக் கேட்டால்தானே. மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவியோடு விட்டாற் போதாதா? இந்த ஊரின் பல்வேறு நிறுவனங்களின் தலைவர்களையும் அல்லவா மேடைக்கு அழைத்திருக்கிறார்கள். அவர்களும், 'நாங்கள் ஒன்றும் சளைத்தவர்களில்லை' என்று தன் பெருமைகளையெல்லாம் பீற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றரை மணித்தியாலமாகப் பேசிக்கொண்டிருந்த பேச்சுக்கள் எல்

லாம் ஒருவாறு ஓய்துவிட்டன. பிள்ளைகள் ஒவ்வொருவரும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும்போது அவர்களின் மலர்ச்சியைக்காண நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

பிள்ளைகள் ஒருவருக்குமே ஏமாற்றமில்லாமல் முதலில் ஒவ்வொருவருக்கும் பெறுமதியான ஒரு பரிசைக் கொடுத்துவிட்டுப் பின்பு வெற்றியெடுத்தவர்களுக்கான பரிசுகளைக் கொடுக்கலாம் என்ற என் ஆலோசனையையாவது முன்னைய கூட்டத்தில் ஏற்றுக்கொண்டார்களே என்ற திருப்தியோடு, பிள்ளைகள் ஒவ்வொருவர் முகத்தையும் நன்கு பார்க்கக் கூடிய இடத்தில் நின்று கொள்கிறேன்.

என்ன இது? செயலாளர் ஏன் இப்படி ஏறுக்கு மாறாக நடந்து கொள்ளவேண்டும்.

வெற்றியெடுத்தவர்களின் பெயர்களைமட்டுமே செயலாளர் வாசித்துக் கொண்டிருக்க, என்னால் இனியும் பொறுக்க முடியாதெனத் தீர்மானித்தவளாய், அவ்விடத்திற்கு நெருங்கி, முதலில் பிள்ளைகள் எல்லோருக்கும் பரிசுகளை வழங்குமாறு சொல்கின்றேன்.

'நேரம் போயிட்டுது. பரிசு கிடையாத பிள்ளையளுக்கு நாளைக்கு நேசரியிலை வைச்சுக் கொடுப்பம்' என்று தலைவி சொல்வதைக் கேட்டு என் நெஞ்சம் வெடித்துவிடும்போல இருக்கிறது.

வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு கொடுத்து முடிவடையும் தறுவாயில் "இனியாவது மற்றப் பிள்ளையளுக்கும் கொடுக்கலாம் தானே" என்று கெஞ்சலாகவே தலைவியிடம் கேட்கின்றேன்.

'இல்லை, எங்கடை பிரதம விருந்தினருக்கு நேரம் போயிட்டுது' என்று தலைவி சொல்லிக்கொண்டிருக்கையில் பிரதம விருந்தினரே குறுக்கிடுகின்றார்.

"இல்லை நான் இருக்கிறன். மற்றப்பிள்ளையளையும் கூப்பிடுங்கோ"

என் உள்ளம் குதூகலிக்கின்றது. ஒவ்வொரு பிள்ளைகளின் பெயரையும் கூப்பிடும்போது காத்திருந்தவர்கள் போல, துள்ளல் நடையுடன் வந்து பவ்வியமாகத் தலைகுனிந்து வணங்கிப் பரிசைப் பெற்றுக்கொள்ளும் காட்சி கண்களை நிறைக்கிறது. இறுதியாக சுதாவின் பெயர் வாசிக்கப்படுகிறது.

'சுதா... சுதா'

சுதாவைக் காணவில்லை. அப்போதுதான் சுதாவைக் காணவில்லை என்று அறிந்துகொண்ட அவளின் தாயும், சுதாவின் பெயரைச் சொல்லி உரத்துக் கூப்பிடுகின்றாள். சுதாவின் பெயரை விளித்துப் பல குரல்கள் ஒரே நேரத்தில் ஒலிக்கின்றன.

எனக்குப் பரபரப்பாக இருக்கின்றது. 'சுதா, சுதா' என்று கூவிக் கொண்டே ஓடுகிறேன். என் பின்னாலேயே என் கணவரும் ஓடிவருவது தெரிகிறது.

நன்கு இருட்டிவிட்டமையால் ஒன்றும் தெரியவில்லை. விளையாட்டுத் திடலில் இருந்து சற்றுத் தூரத்திலிருந்த பாலர் பாடசாலைக் கட்டிடத்தை நோக்கி இருவரும் ஓடுகிறோம். கட்டிடத்தின் முன்னால் உள்ள ஆலமரத்தின் கீழுள்ள வெளியில் யாரோ நிற்பதுபோலத் தெரிகிறது.

அருகில் நெருங்குகிறேன். என் கணவர் கூடவே வைத்திருந்த 'டோர்ச்

லைற்' வெளிச்சத்தை எங்கள் மீது பாய்ச்சுகிறார். என் மனம் அதிர்ந்தது.

வழமையாக ஆலமரத்தின் கீழே நிழல் விழும் சிறு நிலப்பரப்பில் கோடுகீறி விளையாட்டுப் பழக்கும் அதே இடத்தில் சுதா!

கையில் பலூன் ஒன்றை வைத்து ஊதிக்கொண்டு மூச்சு இளைக்க இளைக்க எடுக்கும் முயற்சியைக் கண்டு என் இதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது

ஓடிச்சென்று சுதாவைத் தூக்க முயற்சிக்கிறேன். 'வேண்டாம்' என என்னைத் தடுத்து நிறுத்துகிறார் என் கணவர்.

'சுதா இன்னும் ஊது' -என்று இருவருமே உற்சாகமூட்டுகிறோம்.

பலூன் பெரிதாகிப் பெரிதாகி... 'படார்!'

சுதாவைத் தூக்கிக் கொண்டே, பொத்துக்கொண்டு வரும் அழுகையை அடக்க மாட்டாதவளாய் என் கண வரின் நெஞ்சில் சாய்கிறேன்.

என் முகத்தை நிமிர்த்தி, என் கண்ணீரைத் துடைத்துவிடும் அவரின் முகத்தைப் பார்க்கின்றேன். இப்போது அதில் சிரிப்பு இல்லை. என் பொறுப்பை உணர்த்தும் அதன் அர்த் தம் புரிகிறது. □□

"சமுகப் புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கிய தாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. சமுகப் புறநிலையில் மாற்றம் ஏற்படும்பொழுது அகநிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த, சமுக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமுக உறவுகளைக் கட்டி எழுப் பும் போது, இந்த சமுக மாற்றத்துக்கு ஏற்ப, மக்களின் மனவுலகி லும் ஒரு புரட்சி நிகழவேண்டும். புதிய சமுதாயத்தில் புதிய உறவு களைக்கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப்பார்வையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இங்குதான் கலாசார மறுமலர்ச்சி முக்கியமாகிறது. கலா சாரம் உயர்நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறு கிறது; மனித வாழ்வு உன்னதம் பெறுகிறது, மனிதம் வளர்ச்சி பெறுகிறது. கலாசாரம் உயர்நிலை பெறுவதாயின், கலாசார மறு மலர்ச்சி அவசியம். கலாசாரப்புரட்சி அவசியம்."

— தமிழீழ தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

எத்தனை களங்கள்
கண்ட என்கால்கள்
செத்த நிலைபோல
சவமாகிக் கிடக்கிறதே

கனத்த கருவியை
தோளிலே சுமந்து
தொலை தூரம் எதிரியை
விரட்டிய கரங்கள்
துவண்டு துடிப்பின்றி
களமிழந்து நிற்கின்றன

வல்லூறுகளின் இரைச்சல்...
செல்களின் கூவல்கள்...
இருப்புக் கொள்ளாமல்
என் இதயம் தவிக்கிறது

வேட்டுச் சத்தங்கள்
கேட்கும் பொழுது
வெகுண்டெழ வேண்டும் போல்......
ஆனால் முடியவில்லை

என்தோழர் எல்லையில்
துயிலாமல் தூணாக......




# எரிமலைக் குமுறல்

உதயலட்சுமி

ஏறு நடையாய்
வீறுடன் நடந்தேன்
விண்ணை முட்டிடும்
வேகங் கொண்டேன்
ஒரு நொடிப் பொழுதில்
நாடியடங்கி
கட்டிலே கதியென்று
கலங்கித் தவிக்கிறேன்,

வளையாத பாதை
முடியாத பயணம்
நானோ முடியாமல் முடமாக ...

மண் மீட்க மடிந்தோர்
இல்லத்தில் துயில்கிறார்
சாகாத பிணமாக
நானிங்கு நிலையானேன்.

நானோ நள்ளிரவில்
தனியாக வெம்புகின்றேன்

உரத்த குரலில்
கானம் பாடுதற்கு
விருப்புக் கொண்டேன்
சத்தம் வரவில்லை.

மடிந்தோனின் முன்னால்
மலரெடுத்து மண்டியிட
அது கூட முடியவில்லை
ஒரு சின்ன ரவையின் தழுவலால்
சலனமின்றிக் கிடக்கிறேன்.

ஆனால்......
எந்தன் உள்ளக் குமுறல்
எரிமலையின் குமுறல்போல்
ஆழ்கடலின் கொந்தளிப்பாய்......
அதனிலும் விட......

□□

ஊரின் முற்றத்தில் இருக்கின்ற
முருகன் கோயிலும்
இப்போது ஊமை.
சங்குகள் ஊதினால் தண்டனை.
பொய் சொல்லும் ரேடியோவைக் கேட்கவேணும்;
லங்காபுவத்தையும் நம்பவேணும்;
கட்டாயம்.

அவை சொல்லும்
'விடுதலைப்புலி இங்கில்லை—




## அடக்குமுறை

□□ கோளாவிலூர் கிங்ஸ்லி □□

துரத்திவிட்டோம் வடக்கு நோக்கி.
இங்கு நடப்பதெல்லாம்
சிவில் நிர்வாகம்' என்று.

பி. பி. சி. நேரம் ரேடியோ
ஊமைகொள்ளும்.
உண்மையைக் கேட்டால்
உதையும் அடியும்.
இங்கு அலைகிறது அதிரடிப்படை.

முதுகெலும்பு ஒடிக்கப்பட்ட ஒரு தேசம்
மூச்சு விடுவதற்காக
தனது பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருக்கிறது.
□□


# மதிப்பீட்டுரை

எம்மைப்பற்றி உலகைப் பேச வைத்தவர் எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள். தமிழன் என்றால் அது தமிழீழத் தமிழர் தான் என உலகை எண்ணவைத்தவரும் அவரே. அவரின் பாசறையில் வளர்ந்தவர்கள் வெறும் ஆயுதப் போராளிகளாக மட்டுமின்றி கலைஞராக, கவிஞராக, எழுத்தாளராக, இன்னும் எத்தனையோ முனைகளில் முன்னணித் திறமைசாலிகளாக மிளிர்கின்றனர்.

அந்த வரிசையில் தூயவன் உணர்வுக் கயிற்றிலே எரிசரங்களைத் தொடுத்து மாலையாக்கிப் பொங்குகிறான். நீதியின் முடிவிலே ஒளிவிடும் கதிர்களால் வல்லாதிக்கக் கொடுமைகளை விசாரணைக் கூண்டிலே நிறுத்திக் கணை வீசுகிறான்.

போராளிகள் நெஞ்சில் தலைவன் வீற்றிருக்கும் உன்னத இடத்தை உலகுக்குக் காட்டும் சின்னம் இவன் கவிதைகள். பாடிப் பரவசங் கொள்வோர் பலர். இவனோ தலைவனைப்பாட மொழியின்றித் தவிக்கிறான். எதைப் பாடவென எண்ணித் தடுமாறுகிறான். இங்கே இவன் பேசுவது வசனங்களல்ல; வெளிவருவது அவன் இதயம்.

''தமிழன்னை பக்கம்
திரும்பினேன்
தன்னை அவள்
காட்ட மறுத்து
விட்டாள்
ஏன் இந்நிலை
தன்னில்
உன்னைப் பாட
சொற்கள்
இல்லையாம்''




□ இலக்குத் தெரிகிறது
● தூயவன்
● வெளியீடு:- வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

இங்கே தலைவனின் தனித்துவம் மட்டுமின்றி கவிஞனின் கவித்துவமும் வீறுநடை போடுகிறது. எளிய பதங்களுக்குள் எத்தனை உயரிய உணர்வுகள். தலைவனைப் பாடிய இவன், தலைவன் வழி செல்லும் தமிழீழ மக்களைத் தவறவிடவில்லை. எம் மக்கள் அனுமதியின்றி எவன்வரினும் எமது வீதி, மரம் எனப் பாதம்படும் இடமெல்லாம், வெடிக்கும் என எம்மண்

விடுதலையின் பால் கொண்ட உறுதியைப் பிரகடனம் செய்கிறான்.

விஞ்ஞானம் வளர்ந்து விட்டது தூரங்கள் குறுக்கப்பட்டு விட்டன. நடைமுறைகள் இலகுவாக்கப்பட்டு விட்டன. ஆனால் வளர்ந்து விட்ட விஞ்ஞானத்தை வல்லாதிக்க வல்லூறுகள் கையிலெடுத்துவிட்டன. நன்மை தீமைக்குச் சேவை செய்கிறது. திறமை கொடுமைக்குச் சாமரம் வீசுகிறது இந்நிலை கண்டு பொறுக்காத எம்கவிஞன் ''சந்ததிக்கும் சமாதி கட்டச் சவக்குழி வெட்டிவிட்டோம்'' என்கிறான்.

மனச்சாட்சியைப் புதைத்துவிட்ட உலக அரசியலும், சிதைந்துபோன சோவியத் தேசமும், நீதியைச் செல்லாக் காசாக்கி விட்ட அமெரிக்க ஜனநாயகமும் இக் கவிதைத் தொகுப்பில் எள்ளி நகையாடப்படுவதுடன்; உண்மைகளை அள்ளியும் வைக்கப்படுகின்றது. ''போர் அநாகரிகமானது தான். ஆனால் நாகரிக உலகில் அவசியமானது.'' ஏகாதிபத்தியங்கள் தமது சந்தை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்காக கொடிய போரை உலகெங்கும் ஈவிரக்க மற்று அவிழ்த்துவிடும், மனிதக் கொலைகளை யுத்தத்தின் பெயரால் நியாயப்படுத்தும் ஈனத்தனத்தைச் சாடுவதுடன், அடக்குமுறை யுத்தத்தை, விடுதலை யுத்தத்தால் எதிர் கொள்ள வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

ஒன்று அல்லது இரண்டு சொற்கள் கொண்ட ஆறுவரிகளுக்குள் எத்தனை அற்புதமான கருத்துக்கள்.

மொத்தத்தில் இத்தொகுதி ஒரு புதிய கவிஞனின் படைப்பு என்ற வரம்பைத் தாண்டி எட்டி அடி வைத்திருக்கிறது. எமது போராட்டம் சர்வதேச அரங்கில் வகிக்கும் தனித்துவத்துக்கு நிகராக, இலக்கியமும் எதிர்காலத்தில் இடம்பிடிக்கும் என்பதற்கு இத்தொகுதி ஒரு குறிகாட்டி.




- நிமிர்வு
- தூயவள்
- வெளியீடு:- தமிழ்த் தாய் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

விடுதலைப் போராட்டம் பலஅற்புதங்களைச் சிருஷ்டிக்கிறது. தேசத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஒரு எழுச்சித் தீயை எரிய வைத்து, அந்த வெளிச்சத்தில் புதுமைகளை பூக்க வைக்கிறது.

அந்த வகையில் தூயவளின் 'நிமிர்வு' தன்பங்கை ஆற்றுகிறது. தமிழீழ தேசமெங்கும் பிரவகிக்கும் புறச்சூழல், இவரில் ஏற்படுத்தும் அகத்தூண்டல் கோபமாக, வீரமாக சில சமயங்களில் மன உளைச்சலாகக் கூட வெளிவருகின்றன.

தாய் மண்ணைப்பற்றி இவர் கொண்டிருக்கும் பெருமை தாய் மண் பெருமைப்படுத்தப்படுவதற்குக் காரணமாக இவர் காட்டும் போராளிகளின் சிறப்பு;

''கடலலையே பெருமை கொள்வாய்-நம்
உடலோடு, ஆவி அனைத்தையும்
மண்ணுக்காக ஈந்து நிற்கும் - நம்

மானமாவீரர் வந்துதித்த
ஈழமண்ணினை வந்து தொட
காலம் வந்து வாய்த்ததுக்காய்
கடலலையே பெருமை கொள்வாய்''

என்ற வரிகளில் தனித்துவம் காட்டி நிற்கிறது. வழமையான கடல்தான். வழமையான அலைதான். வழமையான மண்தான். ஆனால் வீரமறவர் ஓடிவிளையாடிய காரணத்தால் - மாவீரர் குருதி பட்ட வளம் கொண்ட காரணத்தால் மண் பெருமை பெற, அம்மண்ணைத் தழுவுவதால் கடலலை பெருமை கொள்ள, இங்கே தேசியம் தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து நிற்கிறது.

வந்து போகும் மனதின் வசந்தத்திற்கான ஏக்கம் இவருடைய கற்பனையையும் தாள்களையும் வரள வைக்கின்றன. ஆனால் அந்த வரட்சியிலும் இவர் எழுதுகோலால் உழுது விதைத்து நிரப்பி விடுகிறார். இத்தேசத்தின் சுதந்திரத்திற்கான அவாவும், சுமத்தப்படும் இடர்கள் மத்தியிலும் முன்னே செல்லும் எமது போராட்டமும் குறியீடாக வெளிப்படுகின்றது.

நேரடி இராணுவ நடவடிக்கைகள் இன்றியே குடியிழந்து போகும் தன் கிராமத்தைக் கண்டு இவர் மனங்கொதிக்கிறார். அந்நிய தேச அடிமை வாழ்வுக்கு ஆசை கொண்டு, எம்மண்ணின் உயிர்த்துடிப்பை அழிப்பவர்களைக் கண்டு இவர் பேனா அழுகிறது. இது வெறும் அழுகையல்ல; அந்த அழுகையினூடே ஓர் அழைப்பும் எழுகிறது.

வாருங்கள்; வாழலாம்
சின்னதாய்
பாதம் பதிக்க
ஒரு உயிர் இருக்குமட்டும்
அது உயிரிழந்து போகாது
தன் நிலையிழந்து போகாது!
வாருங்கள்!

இம்மண்ணை நேசிப்பதிலும், இம்மண்ணின் விடுதலைக்காய் நடைபெறும் போராட்டத்தைப் பாடுவதிலும், அவலங்களைச் சாடுவதிலும் கவிஞர் தன் உணர்வுகளைக் கொட்டுவதில் அவர் தார்மீது ஆவேசம் வெளிப்படுகிறது.

இப் புத்தகத்தின் முன்னுரையில் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் குறிப்பிட்டதை மீண்டும் நினைவுபடுத்துவ பொருத்தமானதென நினைக்கிறேன். ''விழுதெறியக்கூடிய அளவுக்கு வளரக்கூடிய விருட்சத்தை முளையிலேயே இனம் காண முடியும் என்பார்கள். அப்படி இனம் கண்டு கொண்ட முளைகளில் ஒன்று அகிலா பசுபதி''

— யோ. எழிலி

---

''மொழிஎன்பது, மன உறுதிக்கான ஒரு சட்டகம்; கூட்டு நினைவுகளின் களஞ்சியம்; பாதுகாக்கப் படவேண்டிய ஓர் அடிப்படையான தேசிய விழுமியம்''

—. எலியாஸ் கவுரி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)


நான்நிமிர்ந்து பார்த்தேன். மலையின் வளைவில் ஒரு சிறிய, சிவப்பு மின்னல் அவள் அதைச் சுட்டிக்காட்டியிரா விட்டால் அதையும் ஒரு நட்சத்திரம் என்றே நினைத்திருப்பேன். அந்தச்சிவப்பு ஒளி எங்களுக்குத் துணிவையும், வலுவையும் தந்தது. சக்தி மிக்க காந்தம் போல எம்மை அது ஈர்த்தது.

நாங்கள் அவளுடைய அத்தையின் வீட்டை அடையும் பொழுது நன்றாமலே. நெருக்கியடித்துக் கொண்டு உள்ளே போனோம். அந்தச் சிறிய அறையில் எங்கள் எல்லோருக்கும் நிற்கவே இடம் போதாதிருந்தது. செங்கட்டியாலான வெப்பம் ஏற்றப்பட்ட படுக்கையைப் பயன்படுத்துமாறு கிழவி கேட்டுக் கொண்டாள். எங்கள் பொடியன்கள் உடனடியாகவே படுத்துக் கொண்டார்கள்.

''இவர்கள் எல்லோரும் எங்கள் தோழர்கள். அவர்களுக்குச் சாப்பாடு ஏதாவது தயார் செய்ய மகிழ்ச்சியடைந்த அந்தப் பெண் ''ஆமாம்'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''அத்தை பூசினிச்சாம்பார் வைப்போமா?'' என்று கேட்டுக் கொண்டே பரணில் இருந்த ஒரு பெரிய பூசினியைத் தூக்கினாள்.

''இந்தப் போகத்தில் நாங்கள் பறித்த மிகப் பெரிய பழம் இதுதான். உன் அம்மான் மூலம் இரண்டொருநாளில் இதை உனக்கு அனுப்புவதாக இருந்தேன்'' - கிழவி புன்னகைபுரிந்தாள்.



# வழிகாட்டி

மூலம்: சுன் லீ [Sun Lee]

தமிழில்: சோ. ப.

கச் சுணங்கிவிட்டது. வேர்வையால் நனைந்த எங்கள் உடைகளைத் துளைத்துக் கொண்டு உச்சிமலைக் காற்று வீசியது. எங்கள் பற்கள் கிடுகிடுத்தன. சிறகு அரைப் பந்தல் ஊடாக நடந்து சென்ற ஜாஓ, மெல்லிய குரலில் தனது அத்தையைக் கூப்பிட்டாள். கிழவி கதவைத்திறக்க சிறிது நேரம் பிடித்தது. அறைக்குள்ளிருந்த சூடான காற்று எம்மை நோக்கி வீசியது. அழைப்புக்குக் காத்திரா

வேண்டும்'' - அத்தைக்காரிக்கு ஜாஓ உரத்தகுரலில் விளக்கமளித்தாள்.

ஒரு சணல் குச்சியை விளக்குக்கு மேலே பிடித்து அடுப்பை மூட்டிய கிழவி, ஓர் அண்டாவுக்குள் தண்ணீரை ஊற்றினாள்.

''மீண்டும் இராணுவ நடவடிக்கையா?'' - கிழவி மருமகளைக் கேட்டாள்.

அத்தைக்கு இந்தச் சொற்றொடர்கள் பரிச்சயமாய் இருப்பது குறித்து

''அதற்கு அவசியமே இல்லை. நான் இங்கேயே சாப்பிடுகிறேனே,'' ஜாஓ பூசினியைப் பிளந்தாள். ''விதைகளைப் பொரியலுக்கு வைத்துக் கொள்''

இனிய, சூடான, சுவையான சாம்பார் சாப்பிட்டதும் நாங்கள் புத்துணர்ச்சி பெற்றோம். செங்கட்டி மேடையின் கணகணப்பு எங்கள் இருதயங்கள் வரை ஊடுருவியது.

ஜாஓவும் அத்தை நீயும் புகட்டுக்கருகே படுத்துக்கொண்டார்கள். ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள ஓராயிரம் செய்திகள்!

''உந்தப் புதிய மேலங்கியை கொப்பர் வாங்கித்தந்ததா'' - அத்தை கேட்டாள்.

''காசுக்கு அவர் எங்கே போவார்? இது படையினருக்குச் சப்பாத்துத் தைத்து நான் உழைத்த காசு.''

''பள்ளிக்கூடம் போகிறாயா?''

''ஆம். அதோ படுத்திருப்பவர் எனது ஆசிரியர்''

மறுநாள் முழுதும் மலை உச்சியில் ஓய்வெடுத்தோம். வெளியே வந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தோம். சூரிய உதயத்தில் மட்டும் வெயில் சிறிது நேரம் நேரேபிடிக்கும். மிகுதிப் பொழுதெல்லாம் நிழல்தான். வடகிழக்கு மூலையில் ஒரு சிறிய அருவி அடக்கமாக கிளுகிளுக்கும். மலைச்சாரலில் ஒரு சிறிய நீரோடை. அமைதியாக அலையும் அதன் நீரில் பெரும்பகுதி மண்ணில் சுவறும், செங்கல் மேடை அளவிலான ஒரு பாத்தியில் சோளம் வளர்ந்தது. சிறகவரையின் ஓரத்தில் புகட்டின் அளவில் ஒரு மேடை; அதில் உருளைக் கிழங்கு. மலைச்சாரலைச் சூழ பத்துப் பன்னிரண்டு பூசினிக் கொடி. இந்த மலைப்பாறையில் பண்படுத்தக் கூடிய ஒருதுண்டு நிலத்தைக் கண்டுபிடிப்பது நிச்சயம் சிரமமாய் இருந்திருக்கும் பாத்திகளை மழை அடித்துச் செல்லா வண்ணம் அவற்றைச்சுற்றி ஜாஓவின் அத்தை பெரிய கற்கள் அடுக்கியிருந்தாள். சூரிய ஒளியில்லாத குளிர்ந்த சூழலிலும் பயிர்கள் பச்சையாகவும், ஆரோக்கியமாகவும் வளர்ந்தது ஆச்சரியமே, சோளம் உயர வளர்ந்தது. அவரை பெரிதாக கரும்பச்சையாகக்காட்சி தந்தது

ஜாஓ எங்கேயோ போயிருந்தாள். சிறிது நேரத்தில் ஒரு கட்டு ஈரக் கம்புகளுடன் திரும்பினாள்.

''உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று வைத்திருக்கிறேன். இரவில் இவை கண்களாக உதவும்''

ஒரு கூரிய கத்தியால் அவற்றைச்சீவினாள். அவை காட்டு 'பீச்' மரக் கம்புகள். செவ்வூதா நிறமான பட்டையைப் பார்த்தால் 'வாணிஷ்' பூசியது போல இருக்கும். அவை இரும்பு போல உறுதியானவை. ஒரு கம்பை பாறை மேல் அடித்தால் அது உலோகம் போல ஒலிக்கும்.

காலைப் பொழுது இனிமையாகக்கழிந்தது. நாங்கள் இராணுவ நடவடிக்கையை மறந்தே விட்டோம்.

பிற்பகலிலே நாங்கள் சாப்பிட ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, எங்கள் குடிசைக்கு ஒரு கிழவன் வந்தான். வெள்ளாட்டுத் தோலாலான மேலங்கி தரித்திருந்த அவன், கையில் ஓர் இரும்புக்கம்பி வைத்திருந்தான். ''சித்தப்பா'' என்று அழைத்தபடி ஜாஓ அவனை வரவேற்றாள்.

''நேற்று நீங்கள் மலையேறி வரும் போது நான் கண்டு கொண்டேன்.''

''அவ்வேளை நீங்கள் எங்கிருந்தீர்கள்?'' - புன்னகையுடன் கேட்டாள் அவள்.

''ஆட்டுப்பட்டியில், நான் கூப்பிட்டேன்; உனக்குக் கேட்கவில்லை. நான் உனக்கு ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன். ஜப்பானிய பிசாசுகள் மலையைச் சோதனையிடப் போகிறார்களாம்.''

''துணிவிருந்தால் செய்து பார்க்கட்டும்; மலை ஞாயமான உயரம். எங்களிடம் கைக்குண்டுகள் இருக்கின்றன''

''அவர்களுக்கு சில ஆண்டுகளாகவே இம்மலை மீது ஒரு கண். அவர்கள்

மேலே வந்து சேர்ந்தார்களேயானால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது.'

அதன்பிறகு ஒவ்வொரு நாளும் பொழுது புலருமுன் ஜாஓ என்னை எழுப்புவாள். நாங்கள் காவலுக்காக மலை உச்சிக்குப் போவோம். அந்த ஏற்றம் ஆபத்தானது. அவள் முதலில் ஏறுவாள்; பிறகு என்னைக் கைகொடுத்து தூக்கி விடுவாள்.

உச்சியில் பத்தடிச் சதுரம் இருக்கக் கூடிய ஒரு தட்டைக்கல், காலம் காலமாக பெய்த மழையால் அது வழவழப்பாக இருந்தது. நாங்கள் அதில் உட்காருவோம். சந்திரனும் நட்சத்திரங்களும் நமக்குக் கீழே. வான் வெளியில் மிதப்பது போன்று ஓர் உணர்வு. பகலில் ஷாங்சியின் அகன்ற பள்ளத்தாக்குகளையும் ஹெபாய் சமவெளியையும் பார்க்க முடியும் தூரத்துக்கிராமங்களெல்லாம் தெளிவாகத் தெரியும்.

அன்றிரவு கடும்மழை. அந்த உயரத்தில் கடும் மழையில் நனைந்தபடி இருக்கையில், புயல்காற்றில் கடலில் அகப்பட்டு எற்றுப்படுவது போன்ற உணர்வு. அந்தப் பேய்க் காற்று எங்கள் தட்டைக் கல்லை எற்றிவிடுமோ என்று பயந்தேன்.

ஜாஓ என்னை கீழே உள்ள ஒரு குகைக்குள் அழைத்துப் போனாள். மனிதரோ, மிருகமோ வெள்ளைப்புல்லை பரப்பியிருந்தது. அந்த இடுக்கில் நெருக்கமாகப் படுத்திருந்த நாம், இடிமுழக்கத்தைக் கேட்டபடி கிடந்தோம். மழை வெள்ளம் எங்களைத் தாண்டி அசுர வேகத்தில் பாய்ந்தது. ஒரு நீர் வீழ்ச்சிக்குப் பின்னால் பதுங்கியிருப்பது போன்ற உணர்வு.

''இந்தப்புயல் எல்லாம் விரைவில் ஓய்ந்துவிடும். உங்களுக்குப்பயமாய் இருக்கிறதா?'' - என்று கேட்டாள் ஜாஓ.

''தனியே இருப்பது என்றால் பயமாய்த்தான் இருக்கும். நீ பயப்படுவதுண்டா?''

''பயப்படவே மாட்டேன். இப்படி எத்தனை புயல்களைக் கண்டிருக்கிறேன்! குறிப்பாக இன்று எனக்குப் பயமே இல்லை''

''ஏனாம்?''

''உங்கள் குழுவுக்கு வழிகாட்டியாக இருப்பதே பெரிய பொறுப்பு. எனக்கு பயப்பட நேரமில்லை''

அவள் குரலில் ஒரு தீவிரம். அன்றொருநாள் வகுப்பறையில் பாடத்தை வாசித்த பொழுது தொனித்ததே தீவிரம், அது போல.

அவள் சொற்கள் விண்ணை நோக்கி எழுந்தன; திரும்ப மண்ணகம் வந்தன; என்னால் அவற்றை மறக்கவே முடியாது.

பொழுது புலர்ந்தது. மலையைச் சூழ்ந்திருந்த கிராமங்கள் நெருப்புப் பற்றி எரிந்தன. மலை முதுகின் மீது பாம்பு போல வளைந்து வளைந்து எதிரி எம்மை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான். எதிரியின் அணியின் மீது துப்பாக்கிச் சூடு — கிராமத்து கெரில்லா வீரர்கள் மலை இடுக்குகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

''எதிரி இடுக்குகளுக்குள் நுழைந்தாலோ தொலைந்தான். கெரில்லாக்கள் என்றால் அவர்களுக்குப் பயம். வம்புப் பிறவிகள்! இடுக்குகள் பாதுகாப்பு என்று நினைத்தால் வரட்டும். அப்போதெரியும் விளையாட்டு.''

எங்கள் மலைதான் எதியிரின் இலக்கு என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆட்டுப்பட்டியைத் தாண்டி பெரிய கரும்மலையை நோக்கி அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஜாஓவின் சித்தப்பா பரபரப்போடு ஆடுகளை விரட்டிக் கொண்டிருந்தார். அவை சிதறி ஓடின. அவர்

பாறைக்குப் பாறை தாவியபடி பள்ளத்தாக்கை நோக்கி ஓடினார். ஜாஓ கைக்குண்டிலிருந்த கிளிப்பை இழுத்தபடி முன்னே தாவினாள்.

''உங்கள் ஆட்களை அணிவகுத்துக் கொள்ளுங்கள். ஜப்பானியப் பன்றிகளுக்கு குறி சுடும் வேலை எனக்கிருக்கிறது.'' பாறைக்குப்பாறை இலாவகமாகத் தாவியபடி முன்னேறும் ஜப்பானிய அணியை நோக்கி அவள் விரைந்தாள்.

''உன்சிவப்பு மேலங்கி!'' - நான் உரத்துக் கூவினேன்.

''நான் அதை உருமறைத்துக் கொள்வேன்'' - ஜாஓ சிரித்தாள். கண்ணிமைக்கும் வேளையில் அவள் அதை உள்புறமாகும் வண்ணம் புரட்டிவிட்டாள். அதன் வெள்ளை உட்புறம் இப்பொழுது வெளியே தெரிந்தது. பார்த்தால் துள்ளிப்பாயும் ஒரு சின்னக் கறுப்புத்தலை வெள்ளாட்டுக்குட்டிபோல அவள் தென்பட்டாள்.

பாறைக்குப் பாறை தாவித்தாவி அவள் கீழே போகும் போது, அவளுடைய மேலங்கி ஓரத்தை காற்று சவுக்காய் அடிக்க, தீக்கங்குகள் போன்று சிவப்புநிறம் அவளைத் தொடர்ந்தது.

மறுகணம் நாங்கள் அணிவகுத்து, மலையின் பின்புறமாக ஓடிக் கொண்டிருந்தோம். எங்கள் சப்பாத்துக்களையோ, காலுறைகளையோ உருவாமல் அடிவாரத்திலிருந்த ஆற்றில் குதித்தோம். மலையின்மறுபுறத்தில் ஜாஓவின் கைக்குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன.


இன்று ஜாஓ எங்கிருக்கிறாளோ அறியேன். எனக்கு ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அவளுடைய வாழ்க்கையும் செயல்பாடுகளும் எங்கள் தலைமுறைக்கு ஒரு பலமாக— ஆதாரமாக விளங்குகின்றன. ஷாங்சி — காஹார் ஹெபாய் பகுதியில் நாங்கள் பத்து வருடம் தங்கினோம். நாங்கள் களைத்து ஓய்ந்த வேளைகளில் சுவையான காய்கறிச் சாம்பார் பரிமாறிய எங்கள் அணியிலுள்ளோர், நோயினால் தடுமாறிய போது, எங்கள் பைகளைச் சுமந்த — போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளையில், பனிக்குளிர் வாட்டும் இருண்ட இரவு நேரத்தில், கதவுகளைத் திறந்து தங்கள் கணப்புகளின் அருகே எங்களை வரவேற்ற — அத்தைமார்களையும்சித்தப்பன்மார்களையும் நாங்கள் நன்றியோடு நினைத்துக்கொள்வோம்— எங்கள் உடலில் உயிர் உள்ளவரை.

□ □

---

''எதிர்ப்பு என்பது, துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கிறது என்றால் இந்தத்துப்பாக்கிக் குழாயோ, விடுதலை வேட்கையிலிருந்து உதிக்கிறது. இந்தவிடுதலை வேட்கையோ, ஒரு பரந்த பொருளில் சொல்வதானால் எதிர்ப்பின் இயல்பான - தர்க்கரீதியான - தவிர்க்கமுடியாத விளைபொருளே தவிர வேறொன்றுமல்ல'' ......

— காஸன் கானா.:பானி



## மதிப்பீட்டுரை

மனித வாழ்வு பெரும்பாலும் ஒரு சிறு அதிர்ஷ்டத்தினால் அல்லது துர் அதிர்ஷ்டத்தினால் வழி நடத்திச் செல்லப்படுகிறது. 'வாழ்வு' என்பதை அது போன போக்கில் விட்டு விடுகிற பெரும்பாலான மனிதர்களுக்கு அது எப்படி அமைந்து போகிறது. இதற்கு விதிவிலக்காக அமைகிற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மனிதர்கள், தமது வாழ்வில் மரணத்தைவென்று வெற்றி பெறுவதை மிகப் புத்தி பூர்வமாகத் திட்டமிட்டுச் செய்து விடுகிறார்கள்.

இன்றைக்கு இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்னரே மனிதர்களைச் சிந்திக்கத் தூண்டிய குற்றத்திற்காகப் புதைகுழிக்கு அனுப்பப்பட்டவன் சோக்கிரட்டீஸ். "எனது கருத்துக்களைப் புதைத்து விட்டு நான் வாழவேண்டுமா? அல்லது என்னைப் புதைத்து விட்டு என் கருத்து வாழவேண்டுமா?" என்று தெரிவு செய்ய வேண்டிய நிலை வந்த போது மிகத் தைரியமாகவும், திடமாகவும் "என்னைப் புதையுங்கள்; என் கருத்து வாழட்டும்" என்று கூறினான். சோக்கிரட்டீஸ் இவனுக்குச் சற்றும் குறைவிலாத ஒருபெண்மணியை இன்று எமது தேசத்தில் நாங்கள் கண்டோம்.

தமிழீழத்தின் தேசியத் தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவது போல, தமிழீழ சுதந்திரப் போராட்டம் தனக்கே உரித்தான தனிச்சிறப்புகள் பலவற்றைக் கொண்டது. உலக வரலாற்றில் எவரும் சாதிக்காத, எங்கும் நிகழாத அற்புத அர்ப்பணிப்புகளைக் கொண்டது. ஒரு சாதாரணத் தாயின் அசாதாரணத் துணிவும், அவரின் அலாதியான தேசியப் பற்றுணர்வும் தர்மத்தின் குரலாகத் தனித்து நின்று ஒரு சாம்ராஜ்ய அதர்மத்தை எதிர்த்த நேர்மையும், நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால் விட்ட தியாகமும் உலகம் முழுவதையும் ஈர்த்த பண்புகள்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெறுகிறார்கள். 'இந்திய அமைதி காக்கும் படை' என்ற பெயரில் இங்கு வந்த ஆக்கிரமிப்புப் படையால் சாதாரண மனிதர்கள் பலரைக் கொன்று குவித்துச் சரித்திரம் படைக்க முடிந்தது. ஆனால் அன்னை பூபதி போன்ற அசாதாரண ஆற்றல் உள்ள மனிதர்களைக் கொல்ல அவர்களால் முடியவில்லை. அவர்கள் லட்சக் கணக்கான ரவைக் குண்டுகளை வீசி எறிந்தார்கள். ஆனால் 'அன்னை பூபதி' போன்றவர்களைக் கொல்லக் கூடிய ரவையை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

"*The bullet that is to kill me has not yet been moulded*" என்று நெப்போலியன் கூறியது இந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது.

## இது எங்கள் தேசம்

- கதை, வசனம்: எஸ். பி. செல்வன்
- இசை: தமிழீழ இசைக்குழு - எஸ். பி. செல்வன்
- பாடியவர்: புவனா இரத்தினசிங்கம்
- ஒலிப்பதிவு; நவீனன்- சிவா
- ஒளிப்பதிவு: நா. சுதாகரன்
- நெறியாள்கை: வை. இராமநாதன்
- நெறியாள்கை மேற்பார்வை } பொ. தாசன்
- தயாரிப்பு: முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம்.

PUBLIC LIBRARY,
JAFFNA,

மக்களின் மனதில் பெருந்தாயாக நிலைத்து விட்ட அன்னை பூபதியின் வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த வாழ்வைப் பதிவு செய்துள்ளது, "இது எங்கள் தேசம்" என்ற வீடியோப்படம்.

"நந்திக் கடலும் நாயாற்றுப் பெருவெளியும்" என்ற கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் அருமையான கவிதையோடு தொடங்கும் இந்தப்படம், "நாங்கள் வித்தியாசமானவர்கள், எங்கள் தேசம் வித்தியாசமானது" என்று கூறி முடியும் வரை தொடர்பு கெடாமல், தொய்வு ஏற்படாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

இந்தியப்படை இங்கு வந்த போது, மக்களால் வரவேற்கப்பட்ட முறையை, ஹிந்திப்பாடல் ஒன்றின் பின்னணியுடன் காட்டும் இடத்தில் நெறியாளர் எமது பாராட்டைப் பெற்றுக் கொள்கிறார்.

இந்தியப்படை சிப்பாய் ஒருவன் மிகுந்த ஆசையுடன் இளநீரைக் கோதித் தின்னும் காட்சி உறை நிலைக்கு வர, நெருக்கமாக அதனையடுத்து அதே கைகளால் அவன் வைக்கும் நெருப்பு உறை நிலைக்கு வருமிடத்தில் கமெரா தன் பணியைத் திருப்திகரமாகச் செய்கிறது.

ஊரே கொளுத்தப்படுகிறது. மக்கள் அகதியாகப் புறப்படுகிறார்கள். நடந்தும் போகிறார்கள்; வண்டிகளிலும் போகிறார்கள். இந்த அகதி மக்கள் ஏறிய வண்டியை இழுத்துச் சென்றதுதான் மாடுகள் செய்த குற்றமோ? மாடுகளும் அழுது கொண்டு அகதிகளாகப் புறப்படுகின்றன.

மக்களின் சோகத்தைக் காவிச் சென்று வானத்திலே பாடிக் காட்டியதுதான் பறவைகள் செய்த குற்றமோ? குருவிகளும் கூட பறந்து அகதிகளாகின்றன. பகலில் பயணம் செய்தவர்கள் இருளுக்குள் நுழைகிறார்கள். சோக இருள், விரக்தி இருள், அச்ச இருள்! நெஞ்சை மிகவும் தொடுகின்ற காட்சி இது!

பூபதியாக நடிக்கும் திருமதி. ஆரோக்கியம் இறுதிக் கணங்களில் அருமையாக நடிக்கிறார்.

அன்னையின் இறுதிப் பயணத்தில் யாரும் கலந்து கொள்ளக்கூடாது என்றும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்திய இராணுவம் பெரியதொரு வாகனத்தில் அச்சுறுத்தல் ஒலிபரப்புச் செய்து கொண்டு செல்ல, அதற்குப் பின்னாலேயே மிகச் சாதாரணமாக ஒரு சைக்கிளில் இரண்டு பையன்கள் சிறியதொரு ஒலிபரப்பியைக் கையில் கொண்டு, அன்னையின் இறுதி ஊர்வலத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுச் செல்லும் முறை அற்புதம். மனம் உரத்து ஒரு முறை "சபாஷ்" சொல்லும் இடம் இது!

மகளிர் கொண்டு வரும் மக்ஜரை மிகுந்த கவனத்தோடு வாங்கிப் படிப்பது போல் நடித்து அவர்கள் போன கையுடன் அதைக் கசக்கிக் குப்பைக் கூடையில் போடும் முறை - இந்திய இராணுவ அதிகாரிகளை நல்ல அழகாகச் சுட்டும் முறை.

பின்னால் வந்து கொண்டிருந்த இராணுவ வண்டிக்கு உரிய மரியாதை கொடுக்காமல் "தன்பாட்டில்" சைக்கிளில் போய்க் கொண்டிருந்த பொதுமகன் பெற்றுக்கொண்ட பரிசு .. அவர்களை இன்னும் விசேடமாக அடையாளம் காட்டுகிறது.

கடைகளெல்லாம் 'தடவி' அவர்கள் பொருள்கள் வாங்கிய 'முறை' களையும் நாங்கள் மனக் கண்ணில் மீளக் கொண்டு வர முடிந்தது ஆயினும் அவர்கள் இங்கு பேசிய 'ஆங்கிலத்தை' இந்தப் படத்தில் எங்களால் கேட்க முடியவில்லை.

PUBLIC LIBRARY.
JAFFNA.



''ஐயாவுக்கு ஆத்திலை போற எண்ணம் போலை கிடக்கு'' என்று வேணுவுக்குச் சொல்லப்படும் இடம் போன்ற ஒரு சில இடங்களில் உரையாடல் எம் கவனத்தை ஈர்க்கிறது.

உண்ணாவிரதம் நடைபெறும் மேடைக்கு இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் வருகிறார். இரண்டு கைகளையும் எடுத்து நிறைவாகக் கும்பிடுகிறார். பதில் வணக்கம் செய்யும் உண்ணா விரதியின் கைகள்பாதிக் கும்பிடு போடுகின்றன. இவர்கள் இருவரது மனதிலும் எழும் எண்ணங்கள் எப்படிப்பட்டவை என்பதை இந்தக் கும்பிடுதலே காட்டி விடுகிறது. வேறு வார்த்தைகள் வேண்டியிருக்கவில்லை. நெறியாளர் புத்தி நுட்பம் மிகுந்தவர்.

அன்னை பூபதி சிறுவயதில் பார்த்துப் பாராமல் மற்றவர்களுக்கு உதவி செய்பவராக இருந்தார் என்று ஒரு தகவல் கூறுகிறது. இத்தகைய பண்புக் கூறுகளைக் காட்டி அந்தப் பாத்திரத்தை வளர்த்து வந்திருந்தால் ஒரு வேளை இந்தத் தியாக மேன்மை இன்னும் சற்று ஆழமாக மக்கள் மனதில் பதியச் செய்யப்பட்டிருக்கலாம்.

''இப்போது சிறிய விடயங்களை யாவது செய்; நாளடைவில் பெரிய விடயங்கள் உன்னைத் தேடி வந்து நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும்'' என்பது ஒரு பாரசீகப் பழமொழி. வசதிகள் எதுவுமற்ற போர்க்காலச் சூழலில் அன்னை பூபதி பற்றியதொரு பதிவு சிறிய அளவில் வந்திருப்பது பெரு மகிழ்வு தரும் விடயம். முல்லை மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினரே நாளடைவில் இதனை மிகப் பிரமாண்டமான தயாரிப்பாகச் செய்து தருவர் என்ற நம்பிக்கையை இது எமக்கு ஊட்டுகிறது.

'போரும் அமைதியும்' என்ற நாவலை எழுத டால்ஸ்டாய் எடுத்த காலம் ஏழு வருடங்கள். காந்தி இறந்து பல வருடங்களின் பின்னரே அவரைப் பற்றிய ஒரு திரைப்படம் நல்ல முறையில் வெளி வந்தது. இன்னும் ஒரு சில வருடங்களில் அன்னை பூபதி பற்றியும், திலீபனைப் பற்றியும் இன்னும் சிலரைப் பற்றியும் நாங்கள் அருமையான திரைப்படங்களைத் தயாரித்து மக்கள் நடுவில் உலாவவிடுவோம் என்ற நம்பிக்கை 'இது எங்கள் தேச'த்தைப் பார்க்கிற போது ஏற்படுகிறது.

மனிதர்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்குச் சில உற்சாக மூட்டும் வெடித்தல்கள் தேவை. இது அத்தகைய ஒரு ''வெடித்தல்.'' இந்தப் படத்தை ஒரு இந்திய இராணுவச் சிப்பாய் பார்க்க நேரிட்டால், ''*The fault dear Brutus is not in our stars, but in our selves*'' என்று எண்ணிக் கொள்வானாயின் அதுவே எமக்கும், அன்னைக்கும், இப்படத்தைத் தயாரித்தோருக்கும் கிடைக்கும் பெரு வெற்றியாகும்.

— பதுமலாஞ்சனன் —

''நாட்டின் மனச்சாட்சியாக, எழுத்தாளரும் கலைஞரும் தொன்று தொட்டு கருதப்பட்டு வந்துள்ளனர். எங்கேயும் எந்தக்காலத்திலும் அவர்கள்தாம் சமூகத்துக்கு புதிய மதிப்புகளை, புதிய தர்மங்களை, புதிய உண்மைகளை அளிப்பவர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளனர். ஏன்? கலைஞனின், எழுத்தாளனின் சார்பும், வாழ்க்கையும் உண்மைத் தேட்டமாக இருந்ததால் தான். இல்லையெனின் அவன் மனிதகுல மனச்சாட்சியாக முடியாது.''

— வெங்கட் சாமிநாதன் —

இன்று-
மின்சாரம் இல்லை, நெடுஞ்சாலைகளிலும், குறுக்கு வீதிகளிலும் ஓடிச்செல்லும் வாகனங்கள் பெருமளவில் இல்லை. தொலைதூர நண்பனிடம் சிரித்துப்பேசத் தொலைபேசி இல்லை. அவசரச் செய்தியைய அறிவிக்கத் தந்தியில்லை. அதிகாலையில் யாழ்ப்பாணத்தில் புறப்பட்டு மதிய உணவுக்கு திருகோணமலையில் நிற்கும்; மாலை அஸ்தமனத்தில் இங்கு பயணம் தொடங்கினால் காலை சூரியோதயத்தை மட்டக் களப்பில் காணும் போக்கு வரத்து வசதி இன்றில்லை.

ஆனால்—
அன்றைய வாழ்வில் ஒரு செழுமை மிளிர்ந்தது. இதயங்களால் பேணப்பட்ட உறவுகள் எங்கும் வியாபித்திருந்தன. ஒன்றுடன் ஒன்று பிணங்கும் முரண்பாடுகள் கூட உடைந்து சிதறாதவாறு ஏதோவொரு இழை எங்கும் ஓடியிருந்தது.

அது—

ஜீவனுள்ள வாழ்வு, ஏழ்மையும் இனிமையும் கலந்திருந்தன. செல்வமும் சிறப்பும் சேர்ந்திருந்தன. ஒடுக்கு முறைகளும், சுரண்டலும் வெவ்வேறு வடிவங்களில் கோலோச்




# முப்பது வருடங்களுக்குமுன்னால்

நா. யோகேந்திரநாதன்

பட்டப்பகலே கும்மிருட்டாய்த் தெரியும் இல்லாமையின் அகோரக் கவிவு. நாட்களை நகர்த்துவதே மனித வாழ்வின் பெரும் ஒரு சுமையாகி விட்ட காலம்.

அன்றும்-

ஒளி வழங்கிகளாக குப்பி விளக்குகளும், அரிக்கன் லாம்புகளும்; மாட்டு வண்டிகளும் சைக்கிள்களும் பிரதான பிரயாண ஊடகங்களாக, தொலைபேசிகளோ —தந்திச் சேவைகளோ சகல கிராமங்களையும் எட்டிப் பார்க்காத காலம்; கால் நடையாகவே கதிர்காமம் செல்லும் கோலம்.

அன்றும், இன்றும் புறச்சூழ்நிலைகள் ஒன்று தான். வசதியீனங்களும் - நவீன கால சொகுசுகள் இல்லைத்தான்.

சிய போதிலும், அவற்றையும் மீறி ஒருவருக்கொருவர் உரிமை பேணும் உறவு முறை ஒன்று எங்கும் படிந்திருந்தது.

ஒரு கிராமம் - அங்கு யாரோ ஒருவர் இறந்து விட்டார்! ஊரே கூடுகிறது. அங்கு கட்டளையிட யாருமேயில்லை; வகுக்கப்பட்ட கடமை, உரிமைகளாக உருவம் கொள்ள, எடுக்கப்பட வேண்டிய அடுக்குகள் தடங்கலின்றி நடக்கின்றன. ஊர் கூடி ஒப்பாரி வைக்கிறது. பந்தல் போடுவதிலிருந்து, பிணம் எரித்து உலக்கை கடந்து வீட்டினுள் வரும் வரை ஊரே ஒன்று திரண்டு பணியாற்றுகிறது. எட்டுச் செலவு வரை இறப்பு வீட்டிற்கு ஊரே உணவளிக்கிறது.

திருமணவீடு, பூப்புநீராட்டு போன்ற மங்கல நிகழ்வுகள் கூட ஊர் கூடித்தான்

கொண்டாடும். நாள் பலகாரம் சுடும் நாளிலிருந்து பெண்களும், கன்னிக்கால் நடும் நாளிலிருந்து ஆண்களும் ஒன்று இரண்டு கொண்டாட்டத்தைத் தங்கள தாய், மகிழ்ச்சியை அனைவரதுமானதாய்ப் பகிர்ந்து கொள்கின்றனர்.

''பெரியம்மாவுக்கு இண்டைக்கு வீடு மேய்ச்சலாம்'' கரம்பிரிப்பது, ஓலை எறிவது, மேய்வது, வரிச்சுச் சீவுவது, நாருரிப்பது இவையெல்லாம் கிழக்கு வெளிக்கவே ஆரம்பமாகிவிடும். பெரியம்மா இவர்களுக்காகச் சுடும் தோசை முகடுகட்டிக் கொண்டிருக்கும் முருகையனுக்கு மூக்கைத்துளைக்கும். ஆறுபேர் துலாமிதிக்க, ஒருவர் பட்டை பிடிக்க, இன்னொருவர் தண்ணீர் மாற - ஒரு கட்டளையிடப்படாத கூட்டுழைப்பின் பரவல் எங்கும் நிறைந்திருக்கிறது.

இங்கு ஒருவரை முறிய விட்டு மற்றவர் வேலைக்களவு செய்யும் கள்ளத்தனம் இல்லை. ஒருவன காலாட்ட மற்றவன் கசக்கிப் பிழியப்படும் கயமை இல்லை. ஒருவரில் ஒருவர் தங்கி ஒருவருக்கொருவர் துணையாக உழைப்பும், உறவும் இணைந்த ஒரு உன்னத வாழ்வு இது. ஒருவன் சுகவீனமுற்றால் அவன் கோபக்காரனாய் இருப்பினும் கூட அவன் பயிர்களை ஏனையோர் பராமரிக்கும் மகத்துவம் இழையோடிய சிறப்பு இது. பரவைவெட்டு, சூடடிப்பு போன்ற பொது உழைப்பும், அந்தக் கூட்டு உழைப்பினூடு பிறந்த நாட்டார்பாடல்களும் அன்றையவாழ்வின் இணைப்பிரியா இனிய அம்சங்கள்.

உழைப்பு முடிந்த ஓய்வான மாதங்கள், நாட்டார் கலைகள் ஓங்கிச் சிறக்கும் காலம், பொங்கல் விழாக்களும் கூத்துகள், காவடி, கோலாட்டங்கள் என்பனவும் வழிபாடுகளுடன் ஒன்றி கலைவடிவங்களாக வளர்ச்சி பெற்றன.

மாசி பிறந்து ஆவணி முடியும் வரை அங்குமிங்கும் சிதறிக்கிடக்கும் ஆலயங்கள், புதியகளை கட்டும். கொடியேற்றம், திருவிழாக்கள, தேர், தீர்த்தம் என ஒவ்வொரு கோவில்களும் கிராமத்தின் பொதுச் சொத்தாக விழாக் கோலம் பூணும்.

தட்சிணாமூர்த்தியும், வலங்கைமானும் தவில் முழக்க - கொக்குவில் சின்னத்துரை செற்றும், புத்தூர் மார்க்கண்டு செற்றும் சதிராட - கரவெட்டிச் சிகரங்கள் முகப்பை அலங்கரிக்க - இணுவில் சப்பறமும் சாத்துப்படியும் ஆண்டவனை ஏற்றி வீதி வலம் வர - குருவிவாணம் அவுட்டு வாணத்திலிருந்து கர்ப்பங்கலக்கி வரை அல்வாய் வாணவேடிக்கையாளர் தம் திறமை சாற்ற அக்கிராமத்துக்கு மட்டுமின்றி அயற்கிராமங்களுக்கும் அவை அகங்குளிரவைக்கும் சிவராத்திரிகள்.

செல்வச்சந்நிதி-

வெள்ளிக் கிழமையானாலென்ன, திருவிழா நடக்கும் பதினைந்து நாட்களென்ன ஜனசமுத்திரமே அங்கு அலை மோதும். வழியெங்கும் தண்ணீர்ப் பந்தல்கள், அவற்றில் களைப்பாறிச் செல்லும் பக்தர் கூட்டம். பேரப்பிள்ளைகளைத் தோளில் சுமந்து எட்டிநடக்கும் முதியவர்கள், ஈரத்தலை காய்ந்தது பாதி, காயாதது பாதியாக கூந்தலை நீளவிட்டு முடிச்சுப் போட்டு ஓலைப் பெட்டியில் அருச்சனைப் பொருட்கள் சுமந்து செல்லும் அன்னையர்; கொறிக்கப் போகும் கடலைகளுக்காகவும், பார்க்கப்போகும் காவடிகளுக்காகவும் ஓடி ஓடிச் செல்லும் சின்னஞ்சிறுசுகள்; பட்டுப் பாவாடைசரசரக்க, அம்மாவுக்குப்பின்னால் எட்டி நடக்கும் கன்னியர்; இவை சந்நிதித் திருவிழாக்காலம் - வடதமிழீழத்தில் வரையும் கோலங்கள். வண்டி கட்டிச் சென்று அன்னதானம் கொடுப்பதும், ஆட்டக்காவடி தூக்குக்காவடி, துலாக்காவடி; ஈரம் காயாச் சேலையுடன் கையில் வேப்பிலை கொண்டு ஆடும் கரகம் - செடில் குத்திக் கடன் கழிக்கும் செம்மை: இவை அக்கோவிலடியின் காட்சிகள்.

பங்குனித் திங்களென்றால் பன்றித் தலைச்சியம்மனை நோக்கிப் பக்தர்களின் படையெடுப்பு. வடைசுட்டு, மோதகம் அவித்துப் பொங்கிப்படைத்து வீடு திரும்

பும் போது, வரும் வண்டிகளிடையே மத்தியஸ்தர்கள் இல்லாத வண்டிச் சவாரி தொடங்கி விடும். கொம்புகுழைக்காட்டின், உப்பு வெளியின் வீதியும்; வீதி அருகிருக்கும் மதகுகளும், அறுத்தோடிகளும் சவாரி மைதானங்களாக ஒன்றையொன்று முந்தும் போட்டியே ஒரு கண் கொள்ளாக்காட்சி.

ஆடி மாதம் புல்லாவெளி ஆலயச் சூழல் விழாக்கோலம் பூணும் நாட்கள். வடதமிழீழத்தின் மூலைமுடுக்குகளிலிருந்து இந்துக்கள் கிறீஸ்தவர்கள் என்ற பேதமின்றி, ஒன்று கூடி, ஏழு நாட்களும் உவகைக் கடலிலும், பக்திப்பரவசத்திளைக்கும் நாட்கள். கூடாரமடித்துக் கூடிக் களித்து, சமைத்துண்டு, வழிபட்டு, தெய்வீகச் சூழலில் திளைத்த அந்த நாட்கள் மனதுக்கு எத்தனை நிறைவானவை.

அன்று அம்மன் கோவிலில் காத்தவராயன் கூத்து அரங்கேறுகின்றது. அன்றைய நாட்களில் கிராமிய மக்கள் கூத்தின் வெறும் பார்வையாளர்களல்ல' பங்காளிகள். அந்த மேடையேற்றம் கூட ஒரு சில நடிகர்களின் மேடையேற்றமல்ல, கிராமத்தில் பொது விழா...

கூத்துத் தொடங்கவெனக் 'காப்புக் கட்டிய' நாளிலிருந்து, பழக்க நாட்களிலும், பார்வையாளர்கள் குவிந்து விடுவர். மேடையமைத்தல், மைதானம் துப்புரவு செய்தல் என ஊரே திரண்டு ஒத்துழைக்கும். கூத்து நடைபெறும் பொழுதோ மாலையணிவித்தல், மோதிரம் - காப்பு போடுதல் என அது ஒரு விழாவாகவே களை கட்டும். மறுநாள் காலை பொங்கல் செய்து அனைவரும் பகிர்ந்துண்டு; வீடு திரும்புவர். எனினும் கூத்து அத்துடன் முடிவதில்லை. தண்ணீர் இறைப்பவரும், தோட்டம் கொத்துபவரும், மாடு மேய்ப்போரும், தண்ணீர்க் குடம் சுமப்போரும் எனச் சகலர் வாயிலும் கூத்துப்பாடல்கள் பல மாதங்களுக்கு ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

கிட்டி, கிளித்தட்டு இவை எமது பாரம்பரிய விளையாட்டுகள். பன்னைக் கட்டையில் சீவியெடுத்த கிட்டிப்புள்ளு, காற்றைக் கிழித்துச் செல்வதோடன்றிச் சில சமயங்களில் விளையாடுபவர்களின் மண்டையை உடைத்து விடுவதுமுண்டு.

இவை எமது நாளாந்த விளையாட்டுகள் என்றால், ஊரே கூடிக் கொண்டாடும் வருடாந்த விளையாட்டுகள் எமது கிராமங்களின் சிறப்பம்சங்கள். தை மாசத்தில் வானெங்கும், விண் கீதமிசைத்து அசையும் பிராந்தன், கொக்கு, படலம் என பட்டங்கள் மிதக்கும். பட்டம் விடும் போட்டிகள் ஆரம்பித்து விட்டால் முழுக்கிராமமுமே அதில் பங்கு கொள்ளும். தைப் பொங்கல் சார்ந்த விளையாட்டு இது வென்றால், 'போர்த்தேங்காயுடைத்தல்' சித்திரை வருடப்பிறப்பு சார்ந்த விளையாட்டு. இதற்கான தயாரிப்புகள் இரண்டு. மூன்று மாதங்களுக்கு முன்னே ஆரம்பமாகி விடும். ஆலய வாசலில் ஒருவர் தேங்காயை உருட்டி விட, இன்னொருவர் ஓங்கியடிக்க கரகோஷங்கள், உற்சாகமூட்டல்கள் வானைப் பிளக்கும்.

இது முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய எமது கிராமிய வாழ்வு. முந்நூறு வருட அந்நிய ஆதிக்கத்திலும் அசைந்து கொடுக்காது, இடிந்து நொருங்காது. பாதுகாக்கப்பட்ட பழக்க வழக்கங்கள் - பரிணாம வளர்ச்சியாகத் தேங்காயெண்ணைப் பந்தங்களின் இடத்தைக் காஸ்லைற்றுகளும் மின்னாக்கி வெளிச்சமும் எடுத்துக் கொண்டாலும் எமது அடிப்படைகள் பேணப்பட்டன. வட்டக்களரியைச் சதுரமேடை பிடித்துக் கொண்டாலும், கூத்துகளுடன் இசைநாடகங்களும் எமது மரபு வடிவங்களாக அங்கீகரிக்கப்பட்டாலும் எமது கலைகளின் ஜீவன் குலையவில்லை.

ஆனால் இன்று கொள்ளி வைக்க வேண்டிய பிள்ளை 'வீடியோவில்' மரணச் சடங்கைப் பார்த்து அழவேண்டியுள்ளது.

ஒன்று வாய்க்கரிசி போடப்பிள்ளையில்லையென்றால், அறுகரிசி ஏற்க மாப்பிள்ளையும் இங்கில்லை.

ஆம்! ஓமகுண்டம் சுற்றி, அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, மங்கல மேளம் முழங்கத்தாலி கட்ட வேண்டிய மாப்பிள்ளை வெளிநாட்டில். இங்கு பெண்ணே தனக்குத் தானே தாலிகட்டி, படத்துக்கு மாலையிடும் கேவலம். கிராமத்தின் கலை விழாக்களாகத் திகழ்ந்த திருவிழாக்களைத் தேடித்தான் பிடிக்க வேண்டியுள்ளது. பொங்கலும், படையலும், காவடியும், கரகமும் கிராமிய வாழ்வின் ஜீவனாக இருந்த நிலை மாறி, வெறும் மூடநம்பிக்கையின் எச்ச சொச்சங்கள் என எண்ணுமளவிற்கு களையிழந்து விட்டன.

பெற்ற தந்தைக்குப் பிதிர்க்கடன் கழிக்க ஆயிரமாயிரமாக எமது மக்கள் ஆடி அமாவாசையில் திரளும் கீரிமலை, இன்று அந்நியர் வசமாகி விட்டது. பொங்கும் களிப்புடன் மதவேறுபாடுகளைக் கடந்து கூடிய புல்லாவெளியில் இன்று வெறும் புழுதிக் காற்றும், எதிரிப்படைகளுமே குடியிருக்கின்றன. மேற்கே சூரியனும், கிழக்கே பூரணை நிலவும் ஒரே நேரத்தில் தெரிய அலை பொங்கி வாழ்த்த தீர்த்தத் திருவிழா நடக்கும் வல்லிபுரக் கோவில் கடல், இன்று எதிரியின் படகுகள் உறுமிச் செல்லும் பாதையாகி விட்டன. வேரோடி ஆழ்ந்து, விரிந்திருந்த எமது வாழ்நிலைகளும், உறவுகளும் வெறும் போலியானவையாகவும், சம்பிரதாயபூர்வமானவையாகவும் ஆக்கப்பட்டு விட்டன.

எமது பாரம்பரிய வாழ்வு முறைகள் திணிப்புகளால் சிதைக்கப்பட்டு விட்டன. பரிணாம வளர்ச்சியினூடாகப் பாதுகாக்கப்பட வேண்டிய எமது தனித்துவங்கள், பல்வேறு தாக்கங்களால் உருக்குலைந்து விட்டன.

அந்நிய நாட்டு இடப் பெயர்வுகள்- எமது பாரம்பரியச் சடங்குகள் வெறும் ஒளிப்பதிவு நாடாப்பதிவுகளாகி, நான்கு சுவர்களுக்குள், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து ரசிக்கப்படும் காட்சித்துணிக்கைகளாகி விட்டன. குடும்பவழிகாட்டிகளாகத் திகழ்ந்த முதியோரைப் பராமரிக்க, 'பால்வார்க்க' ஆளற்ற பரிதாபத்துக்குரியவராகி விட்டனர். எங்கோ கடன் வாங்கிய இரவல் கலாசாரத்தை இங்கே பிறந்த நாள் விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

ஆக்கிரமிப்பு யுத்தம் -இது எம் இயல்பு நெறிகளின் மேல் ஏவி விட்ட தாக்கங்கள் எண்ணிலடங்காதவை. சாதாரண வாழ்வு நிர்மூலமாக்கப்பட்டதன்மூலம் எமது பண்பாட்டு வழி முறைகள் ஆட்டம் காணத் தொடங்கி விட்டன. அமைதியற்றவாழ்வும், அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் எமது வாழ்நிலையில் பல்வேறு மாற்றங்களைத் திணிக்கின்றன.

அப்படியானால் -எமது தேசிய அடையாளங்கள் அற்றுப்போக வேண்டியது தானா? ஆண்டாண்டு காலமாகக் கோலோச்சிக் கொடி கட்டி வாழ்ந்த இனம், அடியற்ற மரமாகி விழ வேண்டியது தானா? இல்லை! இல்லவே இல்லை! எமது கடமை, ஆக்கிரமிப்பு யுத்தத்தை விடுதலையுத்தத்தால் வெல்வது; அந்நிய பண்பாட்டு ஆதிக்கத்தைத் தேசிய பண்பாட்டு எழுச்சியால் எதிர்ப்பது.

எமது விடுதலை யுத்தத்தின் வெற்றியினால் மட்டும் தான் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கவும், வளர்த்தெடுக்கவும் எமது கிராமிய நெறிசார்ந்த வாழ்வியல் அம்சங்களை மெருகூட்டி காலவளர்ச்சியின் தேவைகளுக்கேற்பச் செழுமைப்படுத்தவும் முடியும். ஒரு சுதந்திர மண்ணில் மட்டுந்தான் இனங்களின் தனித்துவமும் கலை பண்பாடுகளும் பேணப்பட முடியும் என்பது வரலாறு. எனவே இன்று வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் எமது விடுதலையுத்தத்தை ஆயுதப் போராட்டம், பண்பாட்டுப் போராட்டம், கலை இலக்கியப் போராட்டம் எனப் பல்வேறு முனைகளிலும் உரமூட்டுவோம், வேகமாக முடுக்கி விடுவோம். □

**தொகையறா**

ஊரறியாமலே ...... உண்மைகள் கலங்கும்
ஒருபெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே ...... விழுதினைப் புரியும்
வெடிமருந் தேற்றிய வேங்கையைத் தெரியும்.

**பல்லவி**

சாவினைத் தோள்மீது தாங்கிய, காவியச்
சந்தன மேனிகளே — உங்கள்
ஆவிகலங்கிய அக்கணப் போதினில்
ஆரை நினைத்தீரோ?

வாசலில் காற்றென வீசுங்கள் — உங்கள்
வாய்திறந்தோர் வார்த்தை பேசுங்கள்.




# கரும்புலிகள் நினைவாக ஒரு பாடல்

புதுவை இரத்தினதுரை

**சரணம்**


வென்றிடவே கரும் வேங்கைகள் ஆகிய
வீரக் கொழுந்துகளே! — எம்மைக்
கொன்றவர் மீதினில் குண்டெனப் பாய்கையில்
என்ன நினைத்தீரோ?

தாயகத் தாகங்கள் தாங்கிய நெஞ்சினில்
சாவைச் சுமந்தவரே! — உங்கள்
தேகங்கள் தீயினில் வேகின்ற நேரத்தில்
ஆரை நினைத்தீரோ?

தாலாட்டுப் பாடியே தன்முலை யூட்டிய
தாயை நினைத்தீரோ? — உங்கள்
காலாறத் தோள்மீது தாங்கிய தந்தையின்
கையை நினைத்தீரோ?

நாளும் விடுதலைத் தீயில் குளித்திடும்
நாயகனை நினைத்தீரோ? — உங்கள்
தோளைத் தடவியே சென்றுவா என்றவன்
சோகம்தனை நினைத்தீரோ?

□ □ □




# ஒருபோதும்...

□□ இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் □□

தொலைக் காட்சிப் பெட்டி உயிர்த்திருந்தது. வட்டங்களும் சதுரங்களும் வண்ணங்களாக அங்கும் இங்கும் ஓடிக் கடைசியில் உருவங்கள் திரையில் தோன்றின.

முகத்தை சிவப்பாக்கிய பெண்ணொருத்தி நுரை ததும்பும் சாம்புவில் கூந்தலை நனைத்தபடி பளீர் என்ற புன்னகையை காசுக்காய் விற்றுக் கொண்டிருந்தாள்.

சாம்பூ விளம்பரம் முடிய சோப் வரும். பிறகு செய்தி வரும். ஒரு போதும் களைத்துப் போகாத வீடியோக் கமராவினால் எடுக்கப்பட்ட காட்சிகளில் அரசியல் தலைவர்கள் வருவார்கள். இராணுவத்தினரை உற்சாகப் படுத்திக்கொண்டு தமிழர் பிரச்சனை தீர்வு பற்றிக் கதைப்பார்கள்.

முகம் சிவந்த பெண்ணின் வசீகரத்தினால் துவண்டிருந்த சசி இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

வெள்ளவத்தை ஸ்ரேசனில் தரித்து நின்று புறப்பட்ட அந்த ரயில் கடற்கரையோர புகையிரதப் பாதையில் சடசடத்துக்கொண்டு போனது.

உறுமலுடன் வந்த கடற்காற்று போட்டிருந்த ரீசேட்டையும் துளைத்துக் கொண்டு சுகம் விசாரித்தது.

சசியின் பார்வை எதிர்ப்புற ரெஸ்ரிங் ரேபிள் கண்ணாடியின் பக்கம் திரும்பியது. மங்கிய ஒளியில் அவன் முகம் அதில் புன்னகைத்தது.

சீராக வெட்டப்பட்டு கறுத்திருந்த அவன் தாடியைப் பார்க்க சந்தோசமாக இருந்தது.

''உங்கடை தாடிதான் உங்களுக்கு ஒரு தனிக் கவர்ச்சியைக் கொடுக்குது.'' என்று ஒரு விநாடிக்கு ஓராயிரம் தடவை துடிக்கும் தன் விழிகள் துடிக்க நிம்மி சொன்னதும் நினைவுக்கு வந்தது.

என்றுமே மறந்து போகாத அந்த நிஜம் இப்போது இனித்தது.

□ □ □

காலையில் பெய்த மழையால் குளித்திருந்த புற்றரையில் பசுமை மின்னியது. நிழல் பரப்பியிருந்த மரத்தின் கீழ் இருந்த சீமெந்து இருக்கையில் அவனும் நிம்மியுந்தான்.

கைலாசபதி கலையரங்கத்தின் முன்புறம் உதிரிகளாகவும் கூட்டமாகவும் ஆட்கள் நின்றுகொண்டிருந்தனர். பரமேஸ்வராச் சந்தியில் இருந்து வந்த இரண்டு அமைதிப்படை வாகனங்கள் விரைந்து சென்றன.

கனிந்திருந்த நிம்மியின் பார்வையில் காதல் கலந்திருந்ததை அவன் கண்டான். தாடியைத் தடவிக் கொண்டு அவன் அவளைப் பார்வையினால் துழாவினான்.

''ஏன் நீங்கள் நினைவஞ்சலிக் கூட்டத்திற்குப் போகேல்லையே'' என அவள் கைலாசபதி ஹோலைக் காட்டியபடி கேட்டாள்.

''போய் என்ன செய்யிறது. அமைதி காக்க வந்தவங்களை அதைச் செய்ய விடாமல் தடுத்தால் அவங்கள் திருப்பித்தானே அடிப்பாங்கள்'' என்றான் சசி.

சிவந்திருந்த நிம்மியின் முகம் வெளிறிக் கறுத்தது. அவள் மௌனமாக வானத்தைப் பார்த்தாள். அவளில் ஏற்பட்ட மாற்றத்தினை அவன் உணர்ந்திருக்க வேண்டும். அதனால் கதையை அவன் திசை மாற்றினான்.

□ □ □

தொலைக் காட்சித் திரையில் தென்னகத்து தமிழ் சினிமாவின் படக் காட்சி ஒன்றில் கதாநாயகி பாடியபடி குசினி வேலையைத் தொடங்கியிருந்தாள்.

சசி மேசையின் மேல் இருந்த சிகரெட்டை எடுத்து உதடுகளில் பொருத்தி புகை விடத் தொடங்கி-நேரத்தைப் பார்த்தான்.

வெளியே இருள் கனத்திருந்தது. அறை வாசலில் அவன் எதிர்பார்த்திருந்தவன் தென்பட்டான்.

''வா - மச்சான்'' என்று சசி அழைக்க கறுத்த முகமும் தடித்த உதடுகளும் உடைய கரன் வந்தான்.

''என்னடாப்பா...'' என அவன் கேட்டான்.

''என்னவோ - நீ எத்தினை மணிக்கு வாறதெண்டனி'' என சசி கேட்டான்.

''ஓமடாப்பா என்ன செய்யிறது. எல்லாம் நாங்கள் நினைச்சபடி நடக்குதே—''

''ஏன் - என்ன நடந்தது'' சசி தாடியைத் தடவியபடி கேட்டான்.

''வீட்டையிருந்து கடிதம் வந்திருக்கு'' என்று சொல்லும் போதே கரனின் குரலில் உடைவு தென்பட்டது.

''கொம்மா என்னவாம்'' என்றான் சசி அலட்சியமாக.

''அம்மா ஆஸ்பத்திரியிலையாம். அக்கா பத்தாம் திகதி எழுதின கடிதம் இண்டைக்குப் பின்நேரம்தான் கிடைச்சிருக்கு, யாழ்ப்பாணத்தில இருந்து கடிதம், கொழும்புக்கு வரப் பார் பதினைஞ்சு நாள் எடுத்திருக்கு''

''குமாரியோ - குமணவோ எதில வந்தது.''

''குமாரியும் இல்லை; கோதாரியும் இல்லை யாழ்ப்பாணத்தாலை வந்த ஒரு ஆள் கொண்டு வந்தது'' என்றான் கரன்.

''என்ன பிளான்'' சிகரெட்டை நன்றாக உள்ளுக்கு இழுத்தபடி சசி கேட்டான்.

கரனின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. மெல்லிருளில் அது பிரகாசித்ததை சசி கண்டான்.

''யாழ்ப்பாணம் போய் அம்மாவைப் பார்க்க வேணும், மச்சான்'' கரகரத்த குரலில் கரன் சொன்னான்.

''உனக்கென்ன விசரே, நினைச்ச உடன் போய் வரக்கூடிய இடமே யாழ்ப்பாணம்.''

கரன் சசியை புதினமாகப் பார்த்தான்.

''அதுக்காக அம்மாவைப் பார்க்காமல் இருக்கேலுமே.''

''எட மடையா'' என்ற சசி இருக்கையை விட்டு எழுந்தான்.

''போய் வாறது இலேசான விசயமே சும்மா மூளையைக் குழப்புறதை விட்டிட்டு பார்க்கிறதைப் பார்.''

கரன் மௌனமாக நின்றான்.

''வாவன் றீகல் தியேட்டரில நல்ல தொரு இங்கிலீஸ்படம் வந்திருக்கு பார்ப்பம்'' என்றான், உற்சாகத்துடன் சசி.

''என்னடாப்பா - நீ என்ரை மனநிலையைப் புரிஞ்சு கொள்ளாமல் கதைக்கிறாய். நான் என்ரை அம்மாவைப் பற்றிச் சொல்லுறன் நீ பேக்கதை யெல்லாம் கதைக்கிறாய்''

''நீ- ஏன்டாப்பா கோவிக்கிறாய்; நீ போறதெண்டாப் போவன். நீ தலையைக் குடுக்கிறன் என்று நிற்கிறாய், நான் அதைத் தடுக்கிறதே'' எனச் சசி கேலியாகச் சொன்னான்.

''போறது வாறது கஸ்ரம் தான் எண்டதுக்காக உன்னைப் போல என்னால இருக்கேலாது.''

சசி பதில் சொல்லாமல் சிரித்தான்.

''ஆனா நீ யாழ்ப்பாணம் போகமல் இருக்கிறது, தனிய போறவாற கஸ்டத்தால மாத்திரம் அல்ல.''

அதற்கு சசி பதில் ஏதும் கூறவில்லை.

''நான் நாளைக்கு யாழ்ப்பாணம் போகப் போறன். அதுதான் உன்னட்டை சொல்லிப்போட்டு போக வந்தனான்.''

''ம்'' என்ற சசியின் முகம் இருண்டிருந்தது.

□ □ □

நேரம் இரவு பன்னிரண்டு மணி. சுவரில் இருந்த மணிக்கூடு அதனைச் சத்தம் போட்டுச் சொன்னது. மேசை முன்னால் இருந்த சசியின் கையில் வழக்கம் போல சிகரெட் புகைந்தது.

மேசை விளக்கின் மின்னொளி வட்டமாக மேசையில் பரவியிருந்தது. மேசையில் ஒழுங்கில்லாமல் கிடந்த பல வகைப் பொருட்களின் மத்தியில் சில வெள்ளைத் தாள்கள், பேனை எல்லாமே இருந்தன.

எதிர்ப் புறம் இருந்த கட்டிலில் பிறேம் மெல்லியதாக குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். சசி சில மணி நேரத்துக்கு முன்னர் றீகல் தியேட்டரில் படம் பார்த்துவிட்டு ஹோட்டலுக்கு போன பின்னர் நடந்தவை பற்றி யோசித்தான்.

□ □ □

பிறேமும் சசியும் படம் பார்த்து விட்டு வெள்ளவத்தையில் பஸ்ஸினை விட்டு இறங்கியவுடன் சாப்பாட்டுக்காக எதிரே உள்ள ஹோட்டலினுள் புகுந்து கொண்டனர்.

எந்தவித தடைகளுக்கும் ஆட்படாத வாகனங்கள், அகன்ற வீதியால் சாரி சாரி என்று விரைந்துகொண்டிருக்க, மின்சார விளக்குகளால் வரி வடிவம் பெற்றிருந்த விளம்பரங்கள் கிளித்தட்டு மறித்தன.

அந்த ஆங்கிலப்படம் உடலில் கிளப்பியிருந்த உவகைக்கு மெருகூட்ட கிளாஸ்களில் பானம் எடுத்து பருகத் தலைப்பட்டனர். அங்கே வந்திருந்த வதனனும் அவர்களுடன் சேர்ந்திருந் தான். பானம் தந்த உற்சாகத்தினால் மகிழ்ச்சி கூத்தாடியது.

''உவன் விசரன் கரன் யாழ்ப் பாணம் போறானாம்'' என்று சசி தான் தொடங்கினான்.

''ஏனாம்''

''தாய்க்கு சுகமில்லையாம்''

''இவன் என்ன மருந்தோ கொடுக் கப் போறான்'' என அட்டகாசமாக வதனன் சிரித்தான்.

அவன் முன்னரே ஒரு சுற்று அடித்திருக்க வேண்டும். இப்போது இரண்டாவது சுற்றில் இறங்கியிருந்த படியால் கண்கள் தள்ளாடத் தொடங்கியிருந்தன.

''போறவன் எல்லாம் போகட்டும்; எங்களுக்கென்ன நாங்கள் இஞ்ச சந் தோஷமாக இருப்பம்''

''எட மச்சான் உன்ரை நிம்மி யின்ர புதினம் தெரியுமே'' என வத னன்தான் கேட்டான்.

''அவளைப்பற்றி ஏண்டாப்பா இப்ப ஞாபகப்படுத்தினாய்'' என்ற சசியின் குரலில் உற்சாகம் இருக்க வில்லை.

''அவளும் கண்டியில் இருந்து மாற்றம் எடுத்துக்கொண்டு யாழ்ப் பாணம் போய் இப்ப மானிப்பாயில ஒரு பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கிறா ளாம்.''

சசி மௌனமாக இருந்தான். நிம்மி அவனைக் கைகழுவி விட்டது மறக்கக்கூடிய விடயமா?

□ □ □

நேரம் ஒரு மணியாக இருந்தது. நித்திரை இன்னமும் வந்தபாடில்லை. ஹோட்டலில் அடித்தது இப்போதும் சாடையான கிறக்கத்தினை தந்து கொண்டிருந்தது.

மீண்டும் அவன் மனத்தில் நிம்மி வந்தாள். கூடவே கனவுகள் சுமந்த அவளது விழிகளும் வந்தன.

''ஏன் எல்லாவற்றிலும் இருந்து அந்நியப்பட்டு போறியள்'' என அவள் ஒரு நாள் கேட்டாள்.

''என்ன?''

''இல்லை - இந்த மண்ணை - இந்த மண்ணின்ர உணர்வுகளை விட்டு ஏன் அந்நியப்படுறீங்கள்'' என்ற அவள் குரலில் தவிப்பு இருந் தது.

அவன் பதில் கூறாமல் சிரித்தான்.

''நான் கேட்கிறது உங்களுக்குப் பகிடியாக இருக்கா.'' என அவள் மீண்டும் கேட்டாள்.

''சொந்தமண் - போராட்டம் - உணர்வுகள் - பற்றுப்பாசம் எண்டு - என்ர மன உணர்வுகளை மழுங்கடிக் காதை மனச்சுதந்திரத்திற்கு எல்லை யைப் போடாத அண்டைக்கு -அந்த நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு ஏன் போகேல்லை எண்டு கேட்டியே, ஞாப கம் இருக்கா.''

''ம்''

''அண்டைக்கு அங்கை போயிருந் தால் அவனவன் புலம்பிக்கொண்டி ருப்பான் அல்லது ஐ. பி. கே. எவ்.ஐ. திட்டிக்கொண்டிருப்பான். நாங்கள் விழித்தெழ வேண்டும், போராட வேணும் - எண்டு போதிப்பான்கள்.''

"ம்"

"ஆனா அண்டைக்கு நானும் நீயும் இருந்து, அந்த மழை காலத்து சூழலை என்ன மாதிரி அனுபவிச்சம். அந்தச் சுகத்திற்கு இணை எது-" என்று சொன்னான்.

"நான் அந்தச் சுகத்தை அனுபவிக்கேல்லை" என்றாள் நிம்மி, பட்டென்று. அவள் விழிகள் சிவந்திருந்தன. சசிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

□ □ □

நிம்மியின் நினைவில் இருந்து மீண்டபோது இரண்டு மணியாகியிருந்தது. தூக்கம் இன்னமும் கிட்டவர மறுத்துக்கொண்டுதான் இருந்தது.

மேசையில் இருந்த அழைப்பிதழ் கண்களில் பட்டது. அடுத்த கிழமை நடக்கவிருக்கும் ஒரு சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றுவதற்கான அழைப்பிதழ் அது -

அதில் நல்லதொரு பேச்சைப் பேசி விட்டால் போதும்; அந்த கருத்தரங்குக்கு வரும் சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் அமெரிக்காவுக்கோ - லண்டனுக்கோ ஸ்கொலசிப்பில் ஓடிவிடலாம். இரண்டு வருடம் என்னமாய்ப் பறந்துவிடும்.

நிம்மியை மறந்து - அமெரிக்காவா? லண்டனா? என மனம் அலை பாயத் தொடங்கியது.

□□

● ● ●

# மௌனம் கலைய...

□□ நெடுந்தீவு மகேஸ் □□

மௌனமாய்...
நீ இன்னும் மௌனமாய்த்
தூங்குகிறாய்.

ஓலங்கள் ஓயாமல்
காலத்தைத் தின்றிருக்க
இருள் கலையாக் கோலத்துள்
இயமனது ஊர்வலங்கள்.

நீ இன்னும்
மௌனமாய்த் தூங்குகிறாய்
துயர் நிறைந்த மௌனத்துள்
யௌவனங்கள் மகிழ்வதுண்டா?

அயல்வீட்டார்
அழுகுரலைத் தாமடக்க
அணிதிரண்டு நிற்கிறார்
நீ இன்னும் மௌனமாய்...

புத்தம்புதிய இசைமுழங்க
நீ எழுந்து
புதுச் சேதி தரநடந்து,
சுற்றும் உலகில் நம் தேசம்
சூரியனின் ஒளிப்பிளம்பாய்
நித்தம் நிலைக்க
வெற்றி முத்தம் கொடுக்க
மௌனம் கலைந்து
எழுந்து
விரைந்து நட.

□□

72

நியூ லக்கி ஸ்டார் ஜுவல்லறி

நவீன வேலைப்பாடுள்ள அழகிய தங்கப்பவுண் நகைகள், வைரம், வெள்ளி நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
22 கரட் தங்கத்தில் ஓடர் நகைகள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

நியூ லக்கி ஸ்டார் ஜுவல்லறி

229A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்குச் சிறந்த நிறுவனம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

# ஜெயச்சித்ரா நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

177 5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

சரிதா ஜுவல்லர்ஸ்

பவுண், பொன், வெள்ளி
வாங்குவோரும் விற்பனையாளரும்
241, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

அழகுக்கு அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

சோபனா நகை மாளிகை

116 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புதிய டிசைன்களில் அழகிய நகைகளுக்கு
சண்முகா நகை மாளிகை

நகைகள்
குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
ஒரு முறை விஜயம் செய்தால்
உண்மை விளங்கும்

சண்முகா
301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அன்ரன் லக்ஷா**

*22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.*

# அன்ரன் லக்ஷா நகைப் பூங்கா

**187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---


ஓடருக்கு நகைகளைச் செய்து கொள்ளுங்கள்

# யப்பான் ஜுவல்லர்ஸ்


**64, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

தரம் நாடுவோர் நாடும்
இடம் ராதிகா ஜுவல்லர்ஸ்
உங்களது நயம், நம்பிக்கை
நாணயமுள்ள தங்க, வைர
நகைகளுக்கு சிறந்த மாளிகை

1974ல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் போது மின்னொளியில் மினுங்கியவை.



PUBLIC LIBRARY,
JAFFNA,



↑
பின்னர், எதிரிகளால் எரியூட்டப்பட்ட யாழ். நூலகம்

எதிரிகளால் இடிக்கப்பட்ட யாழ். மாநகர சபை மண்டபம்
←

ராதிகா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
222, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.